பொதுசன நூலகம்

Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 18 (09.05.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :220

## மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்),
யாழ்ப்பாணம்.



- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சி/2494)

# இனியும் தாக்குதல் தொடருமானால்

# பாரதூரமான விளைவுகளை இராணுவம் எதிர்கொள்ளும்

## தன்னாமுனை சம்பவத்தைக் கண்டித்து கண்காணிப்புக் குழுவுக்கு புலிகள் கடிதம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டம் தன்னாமுனைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை மதியம் விடுதலைப் புலிகளின் போராளிகள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இலங்கைப் போர்நிறுத்தக் காண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு காரசாரமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.**

**அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-**

கடந்த 6 ஆம் திகதி மட்டக்களப்பு நகரிலிருந்து செங்கலடியை நோக்கி இரண்டு போராளிகள் வந்து கொண்டிருந்தவேளை சுட்டுக்கொல்லப்பட்டனர். சம்பவம் நடந்த இடம் தன்னாமுனைப் பிரதேசமாகும்.

இந்த தன்னாமுனைப் பிரதேசத்தின் 250 மீற்றர் தொலைவில் இரு பக்கமும் இலங்கை இராணுவத்தின் காவலரண்கள் உள்ளன. ஆனால் கொலையாளிகள் இதுவரை பிடிபடவில்லை.

எமது தொடர்புகளின்படி இந்தச் சம்பவம் காலப்போக்கில் தொடர்ந்தும் நடக்கக் கூடிய ஒன்றாகும். நாம் இதையிட்டு கவலையடைகின்றோம்.

இலங்கை இராணுவத்தின் அனுசரணையுடனேயே இக்கொலைகள் நடத்தப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான சம்பவங்களை இலங்கை இராணுவம் தொடருமாக இருந்தால் சமாதான முயற்சிக்கும் யுத்தநிறுத்தத்துக்கும் பாதகமான நிலை ஏற்படலாம் என்பதனை இலங்கை அரசிற்கு கூறுமாறு உங்களை நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் இவ்வாறான சம்பவம் தொடருமாக இருந்தால் பாரதூரமான விளைவுகளை இலங்கை இராணுவம் எதிர்கொள்ள வேண்டிவரும். இவ்வாறான படுகொலைகள் தொடர்ந்தால் நாம் பெருந்

## கந்தப்பொல வன்முறையை கண்டித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்!

கந்தப்பொல மற்றும் பிங்கிரிய பகுதிகளில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து, கொழும்பில் நேற்று ஆர்பாட்டம் நடத்தப்பட்டது. கோட்டே ரயில் நிலையத்துக்கு முன்னால் இந்த ஆர்பாட்டம் பிற்பகல் 3.30 மணிமுதல் ஒரு மணி நேரம் இடம் பெற்றது.

மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், முக்கியஸ்தர் குமரகுருபரன், தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், ரெலோ முதல்வர் சிறிகாந்தா, தில்லைக் கூத்தன் போன்றோரும் பங்கேற்றனர்.

நுற்றுக்கணக்கான தமிழர்கள் பங்குபற்றிய இந்த ஆர்பாட்டத்தில் தமிழர்கள் மீது படையினர் தாக்கு

## புதிய அரசின் நிலைப்பாட்டினை அறிய யசூஷி அகாஷி கொழும்புக்கு வருகிறார்!

புதிதாகப் பதவியேற்ற அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்துவதற்கு, ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி இந்த மாத இறுதியில் கொழும்பு வரவுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்ததன் பின்னர், சமாதானம் தொடர்பான அரசாங்கத்தின், நிலைப்பாடு குறித்தும், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்தும், நேரடியாக அறிந்துகொள்ளும் நோக்குடனேயே அகாஷி கொழும்புக்கு வரவுள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன் இந்த விஜயத்தின்போது உதவி வழங்கும் நாடுகளால் இலங்கைக்கு வழங்க உறுதியளிக்கப்பட்ட 4.5 பில்லியன் டொலர் உதவித் தொகையை விடுவிப்பதற்கான சூழ்நிலைகள் குறித்தும் யசுஷி அகாஷி நேரில் ஆராயவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தீர்வு யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச சந்திரிகா இணக்கம் தெரிவிப்பு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து அவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு ஜனாதிபதி தயாராக இருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

### கொழும்பு பத்திரிகை தகவல்

தன்னாட்சி அதிகாரசபை அமைப்பதற்கான தமது திட்ட யோசனைகளை முன்னைய ஐக்கிய தேசியக்கட்சி அரசிடம் சமர்ப்பித்திருந்தனர். இந்த திட்ட யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்றும் விடுதலைப் புலி

தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து, கொழும்பில் நேற்று ஆர்பாட்டம் நடத்தப்பட்டது. கோட்டே ரயில் நிலையத்துக்கு முன்னால் இந்த ஆர்பாட்டம் பிற்பகல் 3.30 மணிமுதல் ஒரு மணி நேரம் இடம் பெற்றது.

மேல்மாகாண மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்பாட்டத்தில் மக்கள் முன் தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், ரெலோ முதல்வர் சிறிகாந்தா, தில்லைக் கூத்தன் போன்றோரும் பங்கேற்றனர்.

நுற்றுக்கணக்கான தமிழர்கள் பங்குபற்றிய இந்த ஆர்பாட்டத்தில் தமிழர்கள் மீது படையினர் தாக்குதல்கள் நடத்தப்படக்கூடாது போன்ற பல கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டன. (01)

உங்களை நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் இவ்வாறான சம்பவம் தொடருமாக இருந்தால் பாரதூரமான விளைவுகளை இலங்கை இராணுவம் எதிர்கொள்ள வேண்டி வரும். இவ்வாறான படுகொலைகள் தொடர்ந்தால் நாம் பெருந் தன்மையாகப் பார்த்துக் கொண்டி

(12 ஆம் பக்கம் பார்க்க)

துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து அவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு ஜனாதிபதி தயாராக இருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அமைப்பதற்கான தமது திட்ட யோசனைகளை முன்னைய ஐக்கிய தேசியக்கட்சி அரசிடம் சமர்ப்பித்திருந்தனர். இந்த திட்ட யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வோல்ஷின் சாதனையை முறியடித்தார் முரளிதரன்!



இலங்கை அணியின் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் நேற்று நடந்த சிம்பாப்வேயுடனான முதலாவது டெஸ்ட்போட்டியின் இரண்டாவது இனிங்சில் சிம்பாப்வே வீரர் என்காலாவின் விக்கெட்டைவீழ்த்தியதன் மூலம், மேற்கிந்திய வீரர் கொட்னி வோல்ஷின் சாதனையை முறியடித்தார்.

முரளிதரன் 89 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உலகிலேயே டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய முதலாவது வீரர் என்ற பெருமைக்குரியவர் ஆகின்றார்.

மேற்கிந்திய அணியின் முன்னாள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை ஏக பிரதிநிதிகள் என்று புதிய அரசாங்கம் ஏற்கமாட்டாது!

## ஹெல்கிசனிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் தான் என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும்- ஆனால், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் விடுதலைப் புலிகள் ஒரு பிரதான பிரதிநிதிகள் எனவும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் கடந்த வாரம் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மேலும் விதார் ஹெல்கிசனிடம் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசுவதானால் பிரச்சினைக்கு தீர்வு வந்துவிடாது. ஆனால், ஐக்கிய மக்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)



பதிப்புலக வேந்தர்களே!

முதன் முதலில் வடபகுதியில் மட்டுமன்றி இலங்கையிலேயே ROLER IMAGE SETTER - COLOUR SEPARATION
கலர் பிரித்தல் சேவையை அறிமுகப்படுத்துகின்றோம்.

நிலா பதிப்பகம்




- COLOUR SEPARATION SERVICE
  அனைத்து அளவுகளிலும் செய்து கொடுக்கப்படும்
- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை
  (4x8 SIZE PCC COLOUR DIGTAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை
  4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை
  HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல்
  (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE




பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935

# பாரம்பரிய கலைகள் பற்றிப் பேசுவதற்குரிய அடிப்படையாக அமைந்தவர் வித்தியானந்தன்

## குழந்தை ம.சண்முகலிங்கம்



(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை நிலைநிறுத்த ஒரு அரசியல்வாதி அல்லது - அறிஞராக இருந்தவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன். இவ்வாறு குழந்தை ம.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நினைவுதினம் நேற்று மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

பேராசிரியர் குழந்தை சண்முகலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது. இந்தநிகழ்வில், மங்கள விளக்கினை கலாநிதி எஸ். ஜெபநேசன், அண்ணாவியார் கலாபூசணம் கந்தையா நாகப்பு, கலைஞர் எஸ்.ரி.அரசு, வித்துவான் க. சொக்கலிங்கன், கலாநிதி சிவலிங்கராஜா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நினைவுப் பேருரையை கலாநிதி. சிவஞானசுந்தரம் (நந்தி) நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில், தலைமையுரை நிகழ்த்திய குழந்தை ம.சண்முகலிங்கம் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது,

பாரம்பரிய கலைகள் பற்றிப் பேசுவதற்கு அடிப்படையாக அமைந்தவர் வித்தியானந்தன். இவர் பாரம்பரிய பிரதேசங்களில் காணப்பட்ட நாட்டுக்கூத்துக் கலைகளை அதன் மரபுகளையும் பாதுகாப்பதற்கு கடும் பாடுபட்டார்.

பேராசிரியர் வித்தியானந்தன் தமிழின் தனித்துவங்களை பாரம்பரிய கலைகளின் ஊடாக தேட முற்பட்டவர். இவரது முயற்சி தமிழ்த்தேசியத்தின் வளர்ச்சிக்கான அடிப்படையாக அமைந்தன எனவும் தெரிவித்தார்.

இந்த நினைவுரையின் இறுதியில், வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்து அபிவிருத்திக் குழுவின் ‘கீசகன் வதை’ என்னும் வடமோடி நாட்டுக் கூத்து அரங்கேற்றப்பட்டது.

# ‘வலிகளைத்தாங்கி’ கவிதை நூல் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது

ஏழாலையூர் கவிஞர் கு.ரஜீபனின் ‘ வலிகளைத் தாங்கி’ கவிதை நூல் வெளியீட்டுவிழா நேற்றைய தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

கலாநிதி கவிஞர் இ.முருகையன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் வரவேற்புரையை எஸ். ஜெசிதனும், வாழ்த்துரையை புதிய உயர்கல்லூரி இயக்குநர் ச.அருள்நங்கையும், நூல் அறிமுகவுரையை கவிஞர் கல்வயல் வெ.குமாரசாமியும் நிகழ்த்தினர். நூலின் வெளியீட்டுரை யாழ். பல்கலைக்கழக தமிழத்துறை விரிவுரையாளர் கலாநிதி கி.விசாகரூபனாலும், சிறப்புரையை கவிஞர் அகளங்கனும், ஆய்வுரையை கவிஞர் சோ.பத்மநாதனும் நிகழ்த்தினர். இது இந்தக்கவிஞனின் இரண் டாவது கவிதைத் தொகுப்பாகும்.





யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்ற பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவு தினத்தில் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கமலநாதன் உரையாற்றுவதையும், கலாநிதி எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி குழந்தை சண்முகலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், நிகழ்வில் நடைபெற்ற கீசகன் வதை வடமோடிக் கூத்தின் ஒரு காட்சியையும் காணலாம்.


எஸ்ரீக்கணேஷ்

- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து நவீன ரக கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்.
- உறுதி மிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும்.
- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோ கிறேலென்ஸ் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும்.

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

(கட்டுப் பற்களை சுத்தம் செய்யவும் மாத்திரை விற்பனைக்குண்டு)

எஸ்ரீக்கணேஷ்
மூக்குக் கண்ணாடியகமும், பல்கட்டும் இடமும்
566,564, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:222-2486

கிளை-இல. 91, K.K.S. Road, Kokuvil.
கிளை-இல. 80, K.K.S. Road, Chunnakam.
(சி/2508)


## யாழ்.பல நோக்கு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளைக்குழுத் தலைவர், உபதலைவர், செயலாளர், ஆகியோருக்கான யு.என்.டி.பி கடன் வழங்கள் தொடர்பான கருத்தரங்கு இன்று காலை 10 மணிக்கு சங்க நடுவகப் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த கருத்தரங்கில் யு.என்.டி.பி நிறுவன செயற்பாடு பற்றியும் யு.என்.டி.பி கடன் நடைமுறைகள் மற்றும் கிளைக்குழு உறுப்பினர்களின் கடமைகள், அவர்களின் உரிமைகள் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்த மாதம் 4 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை அதே நிகழ்ச்சி நிரலுடன் நடைபெறவுள்ளதால் தவறாது கிளைக்குழு தலைவர் உபதலைவர், செயலாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறும் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் அறிவித்துள்ளார்.(58)

## வீதித்திருத்த வேலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைச் சந்தி தொடக்கம் ரெலிக்கொம் வரையிலான வீதி செப்பனிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல காலமாக குன்றும் குழியுமாக பாவனைக்கு உதவாத நிலையில் இருந்தபோதும் மக்கள் பெரும் அசௌகரியத்துடன் தமது பயணத்தை மேற்கொண்டு வந்தனர்.

இந்த வீதியைத் திருத்துமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றது.

## வெண்மை வாணிபசங்கத்தின் மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச வெண்மை வாணிப சங்கத்தின் மாதாந்த கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சங்கத்தின் தலைவராக இருந்த கி.பால்ராஜ் வெண்மை வாணிப சங்கங்களின் ஒன்றியத் தலைவராக தெரிவுசெய்யப்பட்டதை அடுத்து அவரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், நல்லூர் பிரதேச வெண்மை வாணிப சங்கத்தின் அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் ச.பரணிதரன் கேட்டுள்ளார்.

## பேரவைக் கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பின்போடப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் எஸ். தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

கூட்டம் நடைபெறும் திகதி தொடர்பாக அங்கத்தவர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (94)

# ஆங்கில மொழிக் கற்பித்தலுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் தரம் 6, 7, 8 ஆம் வகுப்புகளுக்கு ஆங்கில மொழி மூலம் சமூகக்கல்விப் பாடத்தை கற்பிப்பதற்கான விண்ணப்பங்கள் சேவையிலுள்ள வடக்கு கிழக்கு மாகாண பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

இந்தப் பாடநெறிக்கான கற்பித்தலை மேற்கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தமது கல்வித்தகமை, சேவைக்காலம் மற்றும் ஆங்கிலத் தகமை போன்றவற்றைக் குறிப்பிட்டு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் வலயக் கல்விப்பணிப்பாளரூடாக மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சர்வதேச செஞ்சிலுவை தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவை தினம் நேற்று யாழ்.மாவட்ட அலுவலகத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது.

வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் இந்தநிகழ்வு நடைபெற்றது.

இந்தநிகழ்வில், யாழ்.மாவட்ட நீதிபதி சறோஜினிதேவி இளங்கோவன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்மாவட்ட வதிவிடப் பிரதிநிதி ஹேரா றோயாட், யாழ். மத்திய கல்லூரி அதிபர் இராசதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.



சர்வதேச செஞ்சிலுவை சங்க தினத்தையொட்டி யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் - செஞ்சிலுவைச் சங்க யாழ்.வதிவிடப் பிரதிநிதி ஹரா, பிரதம விருந்தினராக கலந்துகொண்ட நீதிபதி எஸ்.இளங்கோவன், மற்றும் பிரதிநிதிகளையும் காணலாம்.

# வாராந்த ஆன்மீக சொற்பொழிவு

(ஆழியவளை)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் வாராந்த ஆன்மீக சொற்பொழிவு இன்று காலை 10 மணிக்கு பெரியாழ்வார் ஆசிரமத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் கா.கமலநாதன் “சுடர்அழியும் பல்லாண்டு” என்ற பொருளில் சொற்பொழிவாற்றுவார். (122)

# பொலிஸ் வாகனம் மோதி குடும்பஸ்தர் படுகாயம்!

பொலிஸாரின் வாகனத்துடன் மோதி இளம்குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் அண்மையில் திருநெல்வேலிச் சந்தியில் இடம்பெற்றது.

பலாலி வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பொலிஸாரின் வாகனத்தை பின்தொடர்ந்து படுகாயமடைந்த நபரும் இன்னொருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தனர். பொலிஸாரின் வாகனம் எதுவித சமிக்ஞைகளும் இன்றித் திடீரென வீதியில் நிறுத்தப்பட்டதால், பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் இதனுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பின்னே இருந்து பயணம் செய்த மல்லாவியைச் சேர்ந்த எஸ். விக்கினராசா (வயது 38) என்பவரே தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தார். தெய்வாதீனமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவருக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை.

படுகாயமடைந்த நபருக்கு போதிய சிகிச்சை அளிக்காமல் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை அளித்துவிட்டு இணுவிலில் உள்ள அவரது உறவினர் வீட்டில் பொலிஸார் விட்டுச் சென்றனர். (94)

## ஞானவைரவர் தேவஸ்தான பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீ வைரவர் தேவஸ்தான பரிபாலன சபையின் 46 வது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை அங்கத்தவர்கள் தெரிவும் இடம்பெறவுள்ளது. (58)


ராஜா யாழ்ப்பாணம்.
4 ஆவது வாரமாக
இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த
கில்லி

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2387)

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன் விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த
அருள் (றீல்ஸ்)

(சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

நிறஞ்சனாஸ் சங்கானை
கமல், அபிராமி, நெப்போலியன் நடித்த
விருமாண்டி
(சி-2386)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00, 9.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு. இரவு : 8.45 (பு.நே.)
Hell bound Hell Raiser - 02

# சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் மாற்றம்!

## முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் காணி அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

முன்னைய எமது அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக, அவர்களை தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டமை மற்றும் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிவதற்கு அனுமதிப்பது போன்ற விடயங்கள் - விடுதலைப் புலிகளை அங்கீகரிப்பதாக அமையுமென ஜே. வி.பி. தெரிவித்துவந்தது. அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களையே அது தெரிவித்துவந்தது.

ஆனால், தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைந்த பின்னர் ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக அவர்களை அழைத்தமை,

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கட்டுநாயக்க விமானநிலையம் ஊடாக வன்னி சென்றமை,

தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் - ஆகவே ,அவர்களுடனேயே பேச்சுக்களை நடத்த வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது அலோசகரும் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமரும் கூறியுள்ளமை

இவ்வாறான கருத்துக்கள் பற்றி ஜே.வி.பி. எந்த விமர்சனங்களையும் தெரிவிக்கவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி ஏற்படுத்தியதுடன் ஜே.வி.பியின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண, விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளில் ஜே.வி.பி. இவ்வாறு தொடர்ந்து இருக்குமானால், சமாதான முயற்சிகளில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜே.வி.பியின் தற்போதைய அணுகுமுறை வாய்ப்பானதாக அமையும் என ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

# புலிகள் மீதான தடையை இந்தியா நீக்கவேண்டும்!

## ரவிராஜ் எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா நீக்கவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் தெரிவித்தார்.

இலங்கையின் அயல் நாடான இந்தியாவுடன் தமிழ் மக்கள் நெருங்கிய உறவைக் கொண்டிருந்ததாக கூறிய அவர், தற்போது அந்த மக்கள் இந்தியா மீதான தமது நம்பிக்கையை இழந்து வருவதாகக் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், தமிழ் மக்கள் மீதான நம்பிக்கையை வலுப்படுத்தும் நோக்குடன் விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா நீக்க வேண்டுமெனவும் ந.ரவிராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபையை உடனடியாக வழங்கவேண்டுமென இலங்கை அரசுக்கு இந்தியா வலியுறுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பேச்சை மீள ஆரம்பிக்க ஐந்து நிபந்தனைகள்!

## அரசாங்கத்திடம் நோர்வே சமர்ப்பிப்பு

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஐந்து நிபந்தனைகளை அரசாங்கத்திடம் நோர்வே சமர்ப்பித்துள்ளது.

இந்த ஐந்து நிபந்தனைகளை நோர்வேயின் சமாதானத் தூதுவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளித்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

நோர்வேயின் சமாதானத் தூதுவர்களால், ஜனாதிபதி சந்திரிகாவிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்த முக்கிய நிபந்தனைகள் குறித்து இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவந்திருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே இடம்பெற வேண்டும்.

வெளிநாட்டு உதவிகளை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பேச்சுக்களை முன்னெடுக்கக்கூடாது.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்துடன் இடம்பெறும் என்பதையும், குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் முடிவடையும் என்பதையும் ஜனாதிபதி சந்திரிகா உறுதிப்படுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஆலோசனைகளின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ஆகிய ஐந்து நிபந்தனைகளையே ஜனாதிபதி சந்திகாவிடம் நோர்வே தெரிவித்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்ததாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கந்தப்பொல வன்முறைச் சம்பவம்; விவாதத்துக்கு அரை நாள் ஒதுக்குக!

## சபாநாயகரிடம் தமிழ் எம்.பிக்கள் கோரிக்கை

(கொழும்பு)

கந்தப்பொலவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நாடாளுமன்ற விவாதத்துக்கு அரைநாள் ஒதுக்கப்படவேண்டுமென, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சபாநாயகர் டபிள்யு. ஜே.எம். லொக்குபண்டாரவை நேரடியாகச் சந்தித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கூடும்போது விவாதத்துக்கான நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

சபாநாயகருடனான இந்தச் சந்திப்பில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், ஜோசப் பரராஜசிங்கம், ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வுக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சிறுவர் தொடர்பான மனிதஉரிமை மீறல்கள், சர்வதேச மனித உரிமை மீறல்கள் ஆகியன தொடர்பான விரிவான கருத்துக்களை யாழ். மனித உரிமை ஆணைக்குழு விசாரணை அதிகாரிகள் வழங்கவுள்ளனர்.

# எஸ்.பி. மீதான விசாரணைகள் அடுத்த மாதத்திற்கு ஒத்திவைப்பு!

நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் சமுர்த்தி அபிவிருத்தியமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் ஆஜரானார்.

உணவெட்டுன பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் நீதிமன்றத்தை அவமதித்துப் பேசியதாக குற்றஞ்சாட்டப்பட்டு எஸ்.பி.திஸநாயக்கா மீது சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தேடப்பட்டுவந்த இவருக்கு அழைப்பாணை விடுத்திருந்த போதிலும் எஸ்.பி.திஸநாயக்கா வீட்டில் இல்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தாம் இடம்மாறியதாக நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து அவரது புதிய முகவரிக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது

இதனை அடுத்து நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றத்தில் ஆஜரான திஸநாயக்கா, தாம் நீதிமன்றத்தை அவமதித்துக் கூறியதாகத் தெரிவித்த கருத்து திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தாம் அவ்வாறு எந்தக் கருத்தையும் கூறவில்லை எனவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளை எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி நடைபெறும் என்றும் அன்றையதினம் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவர் மீதான நீதிமன்ற விசாரணைகளை ஐந்து நீதியரசர்கள் அடங்கிய குழு விசாரணை செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது சாட்சிகளை ஆஜராக்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் 9 பேர் சாட்சியமளிக்க உள்ளனர். இந்த வழக்கைத் தாக்கல்செய்த இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன பிராந்திய நிருபர், 'லங்காதீப' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆகியோர் இந்த வழக்கில் சாட்சியமளிக்கவுள்ளனர்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் ஆரம்பமாகிய போது எஸ்.பி.திஸநாயக்காவின் சட்டத்தரணி இந்தக் குற்றப்பத்திரிகையை விசாரிப்பதற்கு உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை என வாதாடினார்.

ஆயினும் பிரதம நீதியரசர் இந்த ஆட்சேபனையை நிராகரித்து விசாரணைகளைத் தொடருமாறு நீதிமன்றத்தைக் கேட்டுள்ளார்.

# இனவாத அரசியல் சக்தியொன்று மறைமுகமாக செயற்படுகிறதாம்!

## பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா

இனவாதத்தைத் தூண்டும் அரசியல் சக்தியொன்று மறைமுகமாக இயங்க ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா மேலும் குறிப்பிடுகையில்,

கந்தப்பொல சம்பவமும், களுத்துறை - இங்கிரிய சம்பவமும் இனவாத சக்திகளின் தூண்டுதல்களுக்கு நல்ல உதாரணம்.

அத்துடன், இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாத வண்ணம் விரைவில் முற்றுப்புள்ளி வைத்துவிடுவோம்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும்போது பொலிஸார் பாரபட்சமற்ற முறையில் கடமையாற்ற வேண்டுமெனத் சகல பொலிஸாருக்கும் அறிவுறுத்தியுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா கூறியுள்ளார்.

# புலிகளின் தன்னாட்சி அதிகாரசபைக்கான யோசனையை நிராகரிக்க வலியுறுத்து!

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஜனாதிபதியிடம் விடுத்தது

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான ஆலோசனையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிராகரிக்க வேண்டுமென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனை - இலங்கையின் பாதுகாப்பிற்கும், இறைமைக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

எனவே, விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான ஆலோசனையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிராகரிக்க வேண்டும்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனையை நிராகரிக்கவேண்டுமென ஜனாதிபதிக்கு நாம் அழுத்தம் கொடுக்கவுள்ளோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கவும் கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனை நிராகரிக்கப்பட வேண்டும் என்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு வழங்குவதற்கு தமது கட்சியின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராகவிருப்பதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்ற இந்த அமைப்பில் சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி.யின் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கத்துவம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆரம்பத் துடுப்பாட்டக்காரராக களம் இறங்குவதற்கு தயார்

## யுவராஜ்சிங் பேட்டி

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் நிரந்த இடம்பிடிக்கும் அபார நம்பிக்கையுடன் இருப்பதாகவும், தொடக்க ஆட்டக்காரராகக களம் இறங்கத் தயார் என்றும், இந்திய அணியின் இளம் நட்சத்திரம் யுவராஜ்சிங் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் இந்திய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்து வந்த இளம் வீரர் யுவராஜ்சிங், டெஸ்ட் அணியிலும் இடம்பிடித்ததோடு, தனது திறமையையும் நிரூபித்துள்ளார். சமீபத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்றுமுடிந்த டெஸ்ட் தொடரில், முதல் 2 டெஸ்ட் போட்டிகளில் கப்டன் கங்கூலி விளையாடவில்லை.

இதன்காரணமாக அணியில் யுவராஜ்சிங் இடம்பெற்றார். இந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி மிகப் பெரிய சரிவில் இருந்தபோது, சதமடித்து அணியைக் கௌரவமான நிலைக்கு யுவராஜ்சிங் உயர்த்தினார். இதனால், 3 ஆவது டெஸ்டில் விளையாட கங்கூலி அணிக்குத் திரும்பிய பின்னரும், யுவராஜ்சிங் டெஸ்ட் அணியில் தொடர்ந்து இடம்பிடித்தார்.

டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக விளையாடியதன்மூலம் கப்டன் கங்கூலியின், முழு ஆதரவையும் பெற்றுவிட்ட யுவராஜ்சிங், டெஸ்ட் அணியில் நிரந்தர இடம்பிடிக்கும் அபார நம்பிக்கையில் இருக்கிறார். அத்துடன், தொடக்க



ஆட்டக்காரராகக் களம் இறங்குவதில் தனக்கு எவ்வித நெருக்கடியும் இல்லை என்றும், யுவராஜ் தெரிவித்திருக்கிறார்.

டெஸ்ட் போட்டியில் சதம் அடித்ததன் மூலம், அணியில் எனது இடம் நிரந்தரமாக இருக்கிறது என்ற அபார நம்பிக்கையுடன் இருக்கிறேன் என்று யுவராஜ்சிங் தெரிவித்தார்.

இதுவரை 4 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ள யுவராஜ்சிங் இதுவரை தொடக்க ஆட்டக்காரராகக் களம் இறங்கவில்லை. இருப்பினும் தொடக்க ஆட்டக்காரராகக் களம் இறங்குவதில் தனக்கு எந்தவித கஷ்ரமும் இல்லை என்றும், வீரேந்திர ஷேவாக்குடன் இணைந்து களம் இறங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சர்வதேச தரவரிசை

## ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அவுஸ்ரேலிய அணிமுதலிடத்தில்

ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் ஒவ்வொரு நாடுகளின் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அவுஸ்ரேலிய அணி தொடர்ந்து 135 புள்ளிகளைப் பெற்று, முதலாவது இடம் வகிக்கின்றது. தென்னாபிரிக்க அணி 113 புள்ளிகளைப் பெற்று 2 ஆவது இடமும், இலங்கை (110 புள்ளிகள்) 3 ஆவது இடமும், நியூசிலாந்து (109 புள்ளிகள்) 4 ஆவது இடமும், இந்தியா 5 ஆவது இடமும் (107 புள்ளிகள்), பாகிஸ்தான் 6 ஆவது இடமும் (106 புள்ளிகள்), இங்கிலாந்து (105 புள்ளிகள்) 7 ஆவது இடமும், மேற்கிந்தியத் தீவுகள் (101 புள்ளிகள்) 8 ஆவது இடமும், சிம்பாப்வே (63 புள்ளிகள்) 9 ஆவது இடமும், கென்யா (28 புள்ளிகள்) 10 ஆவது இடமும் பெற்றுள்ளன. பங்களாதேஷ் 3 புள்ளிகளை பெற்று கடைசி இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

## இங்கிலாந்து கிரிக்கெட் அணி சிம்பாப்வேக்குப் பயணம்!

இங்கிலாந்து கிரிக்கெட் அணி, சிம்பாப்வேக்கு, பயணம்மேற்கொள்ள இங்கிலாந்து கிரிக்கெட் சபை அதிகாரிகள் பச்சைக் கொடி காண்பித்துள்ளனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி, வரும் நவம்பர் மாதம் சிம்பாப்வே பயணம்மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. அரசியல் காரணங்களுக்காக சிம்பாப்வேக்கு பயணம் மேற்கொள்வதில் இங்கிலாந்து அணிக்குச் சிக்கலேற்பட்டுள்ளது.

இந்தநிலையில், இங்கிலாந்து அரசு, அதிகாரிகளுடன் நடததிய பேச்சுவார்த்தையின் முடிவில், இங்கிலாந்து அணி, சிம்பாப்வேக்கு பயணம் மேற்கொள்ள கிரிக்கெட் சபை அதிகாரிகள் பச்சைக்கொடி காண்பித்துள்ளனர்.

பாதுகாப்புப் பயம் காரணமாகத் தவிர, பிற காரணங்களுக்காக சிம்பாப்வே பயணத்தை ரத்துச்செய்தால், சுமார் 10 கோடி ரூபா அபராதம் விதிக்கப்படுமென்றும் தடையும் விதிக்கப்படுமென்றும் சர்வதேச கிரிக்கெட் சபை இங்கிலாந்தை மிரட்டியிருந்தது.

இந்த நிலையில், இங்கிலாந்து அணியும், சிம்பாப்வே பயணத்தை தடுத்து நிறுத்தும் அதிகாரம் தங்களுக்கு இல்லையென்று, இங்கிலாந்து அரசு அறிவித்துள்ளது. மேலும் சர்வதேச கிரிக்கெட் சபையின் அபராதமானது, இங்கிலாந்து கிரிக்கெட்டை பெரியளவில் பாதிக்கும் என்றும் இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் வோகன் தெரிவித்தார்.

இருப்பினும், இது குறித்த இறுதிமுடிவு அடுத்தமாதம் 8 ஆம் திகதி நடைபெறவிருக்கும் கிரிக்கெட் சபைக்கூட்டத்தில் எடுக்கப்படுமென்றும் கூறிய வோகன், இந்தப் பயணம் திட்டமிட்டபடி நடைபெறும் என்பதனை மறைமுகமாகவும் தெரிவித்தார்.

## இலங்கை - பாகிஸ்தான் அணிகளிடையே நடைபெறவிருந்த போட்டிகள் ரத்து

இந்தமாதம் இறுதியில் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறவிருந்த பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கு இடையேயான ஒருநாள் போட்டித் தொடர், ரத்தாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இந்தமாத இறுதியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறுவதாக இருந்தது. ஆனால், போதிய 'ஸ்பொன்சர்கள்' இல்லாத காரணத்தால் இந்தத் தொடர் ரத்தாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொமன்வெல்த், ஐ.சி.சி. டிராபி போன்ற மிகப்பெரிய இரண்டு கிரிக்கெட் போட்டிகள் மலேசியாவில் நடைபெற்றுள்ளது. ஆனால், முறையான மைதானங்கள் இல்லாததாலும், சரியான ஆடுகளங்கள் இல்லாததாலும் மலேசிய கிரிக்கெட்சபை மிகப்பெரிய பாதிப்பைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

முன்னதாக மலேசியாவில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகள் 'மட்' விரிக்கப்பட்டு அதில் போட்டிகள் நடைபெற்றன. ஆனால், சர்வதேச கிரிக்கெட்சபை விதிகளின்படி முறையான ஆடுகளங்களிலேயே போட்டி நடைபெறவேண்டும். இந்த வசதிகள் இல்லாத காரணத்தால் மலேசியாவில் இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஒருநாள் தொடர் நடைபெறுவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டது.

இந்த இரு அணிகளுக்கும் உத்தரவாதப் பணமாகச் சுமார் 25 லட்ச ரூபாயைப் போட்டி அமைப்பாளர்கள் வழங்கியுள்ளனர். தொலைக்காட்சி உரிமம்கூட வழங்கப்பட்டுவிட்டது. பாகிஸ்தான் அணி 22 ஆம் திகதி மலேசியா போக திட்டமிட்டுள்ளது. முதல்போட்டிவரும் 27 ஆம் திகதி நடைபெறுவதாகவுள்ளது.

ஆனால், இந்தப் போட்டிக்குப் போதிய ஸபொன்சர்கள் இல்லாத காரணத்தால் போட்டி ரத்தாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. போட்டி ரத்தாவதற்குரிய வாய்ப்புக்கள் அதிகமுள்ள நிலையில், சர்வதேச கிரிக்கெட் சபைக்கு இதுமிகப்பெரிய பின்னடைவாகும்.

ஏனெனில், மலேசியாவில் கிரிக்கெட் வளர்ச்சி பெறச்செய்ய தீவிர நடவடிக்கைகளைச் சர்வதேச கிரிக்கெட் சபை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

### உதைப்பந்தாட்டக் காட்சிப் போட்டியில்

## மன்னார் - பாடுமீன் அணிகள் யாழ் நகரில் இன்று மோதல்

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக் கழகத்திற்கும், யாழ்.பாடுமீன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி, இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

### வடக்கு கிழக்கு மாகாண மட்ட

## மேசைப் பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அணிகள் வென்றன

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண மட்ட மேசைப் பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆண், பெண் அணிகள் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டன.

மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மேசைப்பந்தாட்டப்போட்டி, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியின் ஒழுங்கமைப்பில் யாழ்.வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களின் மேசைப்பந்தாட்ட அணிகள் பங்குபற்றின.

ஆண்கள் அணியின் வரிசையில் இறுதிப் போட்டியில் மோதிய யாழ்.மாவட்ட அணி, மட்டக்களப்பு மாவட்ட அணியை 3:0 என்ற வீதத்தில் தோற்கடித்து முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

பெண்கள் அணியின் சார்பாக இறுதி ஆட்டத்தில் யாழ்.மாவட்ட மகளிர் மேசைப்பந்தாட்ட அணி திருகோணமலை மாவட்ட மகளிர் மேசைப்பந்தாட்ட அணியை 3:2 என்ற வீதத்தில் தோற்கடித்து முதலாம் இடத்தினை தட்டிக்கொண்டது.

வெற்றிபெற்ற அணிகளுக்கு தமிழீழ விளையாட்டுதுறைப் பொறுப்பாளர் பாப்பா யாழ்.மத்தியகல்லூரி அதிபர் இராசதுரை ஆகியோர் பரிசில்கள் வழங்கி கௌரவித்தனர்.

# விளையாட்டு

## பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான மென்பந்துப் போட்டிகள் இன்று ஆரம்பம்

யாழ்.மாவட்டப் பிரதேச செயலர் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்று வருகின்ற போட்டித் தொடர்களின் ஓர் அங்கமாக, இன்று காலை 8.30 மணிமுதல், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட டுக்கழக மைதானத்தில் மென்பந்துக் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டித் தொடரானது, யாழ். மாவட்டப் பிரதேசத்தைச் சேர்ந்த 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும், நடைபெற்ற மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில், முதல் இடங்களினைப் பெற்ற கழகங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

இந்தப் போட்டித்தொடரானது, அணிக்குப் 11 வீரர்களைக் கொண்ட, 15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர் தெரிவித்தார்.

இன்று நடைபெறும் போட்டிகளின் விபரம் வருமாறு -

காலை 8.30 மணிக்கு - நல்லூர் பிரதேச பிரிவு அணி எதிர் - கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு அணி.

காலை 11 மணிக்கு - மருதங்கேணிப் பிரதேசசெயலர்பிரிவு அணி எதிர் - வேலணை பிரதேச செயலர்பிரிவு அணி.

மாலை 1.00 மணிக்கு - சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவு அணி எதிர் - நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவு அணி. (58)

## இந்திய அணி பயிற்சியாளராக ஜோன்ரைட்டே நீடிப்பார்!



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக ஜோன் ரைட் நீடிக்கப்படவுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிக்கு பயிற்சியாளர் ஜோன்ரைட்டின் பங்கு அளப்பெரியது. ஜோன்ரைட்டின் பதவிக்காலம் இவ்வருடம் செப்டம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது. இந்த நிலையில் பயிற்சியாளர் பதவியில் ஜோன் ரைட் தொடர்ந்து நீடிக்கப்படுவார் என நம்பப்படுகின்றது.

மிகச்சிறப்பான முறையில் ஜோன்ரைட் இந்திய அணியின் பயிற்சியாளராகச் செயற்பட்டு வருவதைத் தொடர்ந்து, இதனை அங்கீகரிக்கும் முகமாக அவர் தொடர்ந்து பயிற்சியாளராக பணியாற்ற நியமிக்கப்படுவார் என்று, நம்புவதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் டால்மியா தெரிவித்துள்ளார். கடந்த 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல், ஜோன் ரைட் இந்திய கிரிக்கெட் அணியின பயிற்சியாளராக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஆனால் ஜோன்ரைட் மீண்டும் பயிற்சியாளராக நியமிக்கப்படுவது பற்றிய முடிவு கிரிக்கெட்சபை செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் என்று, டால்மியா தெரிவித்தார்.

இது குறித்து, டால்மியா அளித்தபேட்டியில் கூறியிருப்பதாவது -

தற்போதைக்கு யாருக்கும் குட்பை சொல்லும் திட்டம் எங்களிடம் இல்லை. ஜோன்ரைட் மிகச்சிறப்பாகச் செயற்பட்டுவருகின்றார். ஆனால், இது குறித்து, கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயற்குழுவில்தான் முடிவெடுக்கப்படும்.

இது குறித்து முடிவெடுக்க சபைத்தலைவருக்கு செயற்குழு அதிகாரம் கொடுக்கும் என்றாலும், பொறுத்திருந்துதான் முடிவெடுக்கமுடியும். சரியான நேரத்தில் இது குறித்து முடிவெடுக்கப்படும் என்று கூறினார். 2000 ஆம் ஆண்டு சிம்பாப்வேக்கு எதிராக நடைபெற்ற தொடரின்போது, கபில்தேவிற்கு பதிலாக புதிய பயிற்சியாளராக ஜோன்ரைட் நியமிக்கப்பட்டார். கடந்த ஆண்டு டாக்காவில் நடைபெற்ற டி.வி.எஸ் கோப்பை போட்டிக்கு முன்னர் மேலும் ஒருவருட காலத்துக்கு ஜோன்ரைட்டின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### யாழ். பொது நூல் நிலையத்தில்

# அமெரிக்க தூதரகத் தகவல் பிரிவு தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கை

## புதிய ஜனநாயகக் கட்சி கண்டனம்

யாழ். பொது நூலகத்தில் அமெரிக்கத் தூதரகத்தின் தகவல் பிரிவை ஆரம்பிக்கும் முயற்சி - தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கை என புதிய ஜனநாயகக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

யாழ். நூலகத்தின் ஆலோசனைசபை இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் தகவல் பிரிவைப் பொது நூலகத்தில் ஆரம்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக வெளியான தகவலையடுத்து, யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் அனுப்பி வைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ். பொது நூலகத்தில் அமெரிக்கத் தூதரகத்தின் தகவல் பிரிவு ஒன்றை ஆரம்பிப்பதற்கு தங்கள் தலைமையில் கூடிய யாழ்.நூலகத்தின் ஆலோசனைச்சபை இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு அழைப்பும், கோரிக்கையும் விடுத்துள்ள இந்த நடவடிக்கையானது பாரதூரமான பின்விளைவுகளை வடபுலத்திற்கும் எமது மக்களுக்கும் கொண்டுவரக் கூடியதாகும். இத்தகைய நடவடிக்கை முயற்சி அக்கறை உள்ள அனைவரையும் அதிர்ச்சிக்கும், கவலைக்கும் உள்ளாக்கியுள்ளது.

அமெரிக்கா இன்று தனிப்பெரும் வல்லரசாகி நின்று, உலகம்பூராவையும் ஆதிக்கம் செய்ய சகல வழிகளாலும் முனைந்து நிற்கின்றது. குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் திட்டமிட்டும் வருகின்றது.

இத்தகைய அமெரிக்காவின் தூதரகத் தகவல் பிரிவு ஒன்றை யாழ். பொது நூலகத்தில் இயங்க வருமாறு கேட்பது தமிழ் மக்களுக்கு எதிரான தொன்றாகவே காணமுடியும். 1968 ஆம் ஆண்டில் யாழ். பொதுநூலகத்தில் இவ்வாறான அமெரிக்கத் தகவல் நிலையத்தைக் கொண்டுவந்தபோது, நமது கட்சியும் மக்களும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது.

மேலும் யாழ். பொது நூலகம் புனரமைக்கப்பட்ட பின்பு இன்றுவரை முறையான திறப்புவிழாவினைக் காணவில்லை. முழுமையான சேவையினையும் வழங்கவில்லை. வேலைகளும், ஒழுங்குபடுத்தல்களும் செய்ய வேண்டி இருக்கின்றன. இந்நிலையில், அவசர அவசரமாக அமெரிக்கத் தூதரகத்தின் தகவல் பிரிவினருக்கு நூலகத்தில் இயங்குவதற்கு இடமளித்து, கோரிக்கையும் அழைப்பும் விடுவது எத்தகைய பின்னணியில் என்றே கேட்க விரும்புகின்றோம்.

அமெரிக்கத் தகவல் பிரிவின் வேலை வெறுமனே நூல்கள், சஞ்சிகைகளுடன் நின்றுவிடுவதில்லை. அதற்கப்பாலான அரசியல் சமூக பண்பாட்டு ஊடுருவல்களுடன், இராணுவ உளவு நடவடிக்கைகளுடனும் சம்பந்தப்பட்டவையாக அமைந்து கொள்ளும் இந்த அபாயத்தையும் புரிந்துகொள்ளல் வேண்டும்.

இந்தப் பிரிவை அனுமதிப்பதானால், ஏனைய பெரும் வல்லரசு நாடுகளும் தத்தமது தகவல் பிரிவுகள் இயங்குவதற்குப் பொது நூலகத்தில் இடம் கேட்டால், நூலகத்தின் கதி என்னவாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

யாழ். பொதுநூலகம் மக்களின் பொதுச் சொத்தாகும். அதனை உலக மக்களையும், இலங்கை மக்களையும் குறிப்பாகத் தமிழ் மக்களையும் அச்சுறுத்தி நிற்கும் அமெரிக்க ஆதிக்க வல்லரசின் உளவுத் தளமாகப் பயன்படுத்தப்படுவதை எக்காரணம் கொண்டும் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

எனவே தங்கள் தலைமையிலான யாழ். பொது நூலக ஆலோசனைச் சபையானது, நூலகத்தில் அமெரிக்கத் தூதரகத்தின் தகவல் பிரிவு ஒன்றை அமைக்க ஒருதலைப்பட்சமான முடிவை எமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்த முயற்சியைக் கைவிடும்படியும் வேண்டிக்கொள்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளது.

### உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்துக்கு விண்ணப்பம் கோரல்

தென்மராட்சிக் கல்வி வலயத் தமிழ்மொழி உதவிக் கல்விப் பணிப்பாளருக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1 அல்லது வகுப்பு 2 தரம் 1 ஐச் சேர்ந்த தமிழ்மொழியில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 31.05.2004 ஆகும்.

### தீவக வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

தீவக கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை, யாழ்.எழுவைதீவு றோ.க.த.க.பாடசாலைகளுக்கு அதிபர் பதவி வெற்றிடம் உள்ளது.

இந்தப் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


இலங்கை அதிபர் சேவை தரத்தைச் சேர்ந்தவர்களும், ஆசிரியர் தரம் 1, 2 - I, 2 - II ஐச் சேர்ந்தவர்களும் 20.05.2004 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தீவகவலயக் கல்விப்பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### மாதாந்த இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இசைக்கச்சேரியில் பாட்டு, சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரன், வயலின் எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் கே.கண்ணதாசன், கெஞ்சிரா ஆர்.சிவராமன், கடம் சதாவேல்மாறன், முகர்சிங் என்.சதீஸ்குமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (44)




மானிப்பாயைச் சேர்ந்த செ.செல்வதாஸினால் வடிவமைக்கப்பட்ட 'பாலர் பள்ளி' எனும் கணினி மென்பொருள் அறிமுகவிழா அண்மையில் மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கே.விக்னேஷ் முன்பள்ளி மாணவி ஒருவருக்கு மென்பொருளை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

### பருத்தித்துறை பஸ் நிலையத்தில்

## போதிய அடிப்படை வசதிகளின்றி பயணிகள் பெரும் சிரமமடைகின்றனர்

பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமையினால், பிரயாணிகள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையத்தில் நீண்டதூரங்களில் இருந்துவரும் பயணிகள் மலசலகூட வசதியில்லாமையினால் பெரும் அவலங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பஸ் நிலையத்தில் பஸ்வண்டிகள் சென்று வரும் நேரசூசியோ, நேரத்தைக் காட்டும் மணிக்கூடு, மின்சார வசதி, ரெலிபோன் வசதியோ இல்லையென பொதுமக்கள் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பஸ் நிலையத்தில் தொலைபேசி வசதி இல்லாததினால், பஸ் டிப்போவிற்கும் - பஸ் நிலையத்திற்கும் தொடர்பு இல்லை. குறிப்பிட்ட நேரத்தில் பஸ் வண்டி வராத சந்தர்ப்பத்தில், இதற்குரிய காரணத்தை விசாரித்து, பிரயாணிகளுக்குப் பதில் செல்லமுடியாத நிலையில் நேரக் கணிப்பாளர் திண்டாடுவதுடன். பிரயாணிகளிடம் குறையும் கேட்கவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பருத்தித்துறை பஸ் நிலையத்தில் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற அரச உயர் அதிகாரிகளும், நாடாளுமன்ற அங்கத்தவர்களும் முன்வருவார்களா எனப் பொதுமக்கள் சார்பில் விசனம் தெரிவிக்கின்றனர். (17)

### மட்டுவில் அம்பாள் ஆலய மஹோற்சவம்

மட்டுவில் வடக்கு அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம்பெறும்.

9 ஆம் நாளான ஜூன் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் 10 ஆம் நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

மஹோற்சவக் கிரியைகள் யாவும் சிவ ஸ்ரீ சோ.மதுசூதனக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். (24)

### ஒன்றுகூடல் நிகழ்வு

ஒஸ்மானியாக் கல்லூரியின் ஒன்றுகூடல் நிகழ்வு - வடபிராந்திய சத்ய சாயி சேவா நிறுவனங்களின் ஏற்பாட்டில் நாளை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அங்கு கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படுவதுடன், கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளதாக சாயி நிறுவன சேவை இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (111)


இனிய பிறந்தநாள் 1 வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ற.சோமியா
முகவரி : வல்வெட்டித்துறை

எட்டாவது அகவையில்



பெயர் : சி.குருபரன்


### தற்போது பெய்துவரும் மழையால் பயிர்ச்செய்கை பாதிப்பு

அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையினால், தென்மராட்சிப் பகுதியில் பயிர்ச்செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மட்டுவில், சரசாலை, விளைவேலி, கல்வயல், பெருங்குளம், கிராம்புவில் பகுதி வயல்வெளிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால், பயன்தரு மரக்கறிப்பயிர்களெல்லாம் அழிந்துள்ளது.

நடுகை செய்யப்பட்டுச் சில தினங்களான வெங்காயப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியதனால், வெங்காயப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள்- பெருந்தொகைப் பணத்தை இழந்து விரக்தியுற்ற நிலையிலுள்ளனர். (22)

## விலைப்பட்டியல் பார்வைக்கு வைப்பது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை

சில்லறைப் பொருட்களுக்கான விலைப்பட்டியல் யாழ். மாவட்டததில் உள்ள அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களிலும் பொருட்களுக்கான விலைப்பட்டியல் - நுகர்வோரது பார்வைக்கு வைக்கப்பட வேண்டுமென, யாழ். வர்த்தகசங்கத்தினர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயப்பிரிவினர் ஆகியோர் வேண்டுகோள் விடுத்தபோதும், விற்பனை நிலய உரிமையாளர்கள் இவற்றைக் கடைப்பிடிப்பதில்லை எனத் தெரியவருகின்றது.

கடந்த முதலாம் திகதி முதல அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களிலும் பொருட்களது விலைப் பட்டியல்கள் நுகர்வோரது பார்வைக்கு வைக்கப்படவேண்டுமெனப் ஆயப்பகுதியினர் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இதுவரையில் விற்பனை நிலைய உரிமையாளர்கள் இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்கவில்லை என விசனம் தெரிவித்த பொதுமக்கள் - இதற்கு முன்னரும் வர்த்தக சங்கத்தினர் பொருட்களது விலைப் பட்டியல், பொதுமக்களது பார்வைக்கு வைக்கப்படவேண்டுமெனச் சகல வர்த்தக நிலையங்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

வர்த்தக சங்கத்தினர் இதனை நடைமுறைப்படுத்துவதில் காட்டும் அசமந்தப்போக்கினாலே விற்பனை நிலைய உரிமையாளர்கள் இவ்வாறு நடந்துகொள்வதாகத் தெரிக்கப்படுகிறது.

## நட்டத்தில் இயங்கும் வடகடல் நிறுவனம்

வடகடல் நிறுவனம் போதியளவு நிதியின்மையால் நட்டத்தில் இயங்கி வருகிறது. ஓரளவு வலை உற்பத்தி இடம்பெற்ற போதிலும், எதிர்பார்த்தளவு விற்பனைகள் இடம்பெறுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறுவனம் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக மின்சாரக் கட்டணம் செலுத்தவில்லை. இதனால், இலங்கை மின்சாரசபைக்கு மின் கட்டணமாக 327000 ரூபாவைச் செலுத்தவேண்டியுள்ளது. இந்த நிலையில், தொடர்தும் உற்பத்தி செயற்பாடுகள் இடம்பெற்றே வருகின்றது.

இத்துடன் கடந்த 14 மாதங்களாக இந்த நிறுவன தொழிலாளர்களின் தொழிலாளர் சேமலாபநிதியமும் செலுத்தப்படாமலுள்ளது.

வடகடல் நிறுவனம் தற்சமயம் எந்த அமைச்சின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதென்ற எதிர்பார்ப்புடன் இருப்பதாக நிறுவன அதிகாரி தெரிவித்தார். இந்த நிறுவனத்தின் அண்மைக்கால செயற்பாடுகளின் நிலைமைகளால் வடகடல் நிறுவனம் தற்காலிகமாக மூடப்படலாம் எனவும் தெரிவிக்கின்றனர். (91)

## வடமராட்சி குடத்தனை பகுதியில் பெருமளவு டுபாய்பூசனி செய்கை

(வடமராட்சி)

வடமராட்சி அம்பன் குடத்தனைப் பகுதிகளில் ஏராளமான டுபாய்ப் பூசனிக்காய் செய்கை பண்ணப்பட்டுள்ளது. இன்றும் ஒருமாத காலத்தில் டுபாய் பூசனிக்காய் அறுவடை செய்யப்படும் என அங்குள்ள விவசாயிகள் தெரிவித்தனர்.

அம்மன், குடத்தனைப் பகுதிகளில் வெள்ளைக் களிமண்ணிலேயே இவை செய்கை பண்ணப்படுகிறது.

டுபாய்ப் பூசனி - பரீட்சார்த்தமாகச் செய்யப்பட்டு நல்ல பயனைத் தந்ததினால், பல விவசாயிகள் இப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வயல் நிலங்களில்தான் கூடுதலாக இது செய்கைபண்ணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (17)


வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :----------------------------------

முகவரி :----------------------------------

பிறந்த ஆண்டு:----------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


------------------------
பெற்றோர் ஒப்பம்



# விளையாட்டு அரங்கம்

# உங்களையும் எதிர்பார்த்தோம்

ஜஸ்ரின் ஹெனின் ஹார்டென் இன்றைய ரெனிஸ் உலகின் முதலாவது தரத்தில் இருக்கும் வீராங்கனை. ஒரே வருடத்தில் மூன்று Grand Slams வென்றவர். அத்தோடு, அவர் சாம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டிய பிரெஞ்ச் ஓப்பன் போட்டிகள் இம்மாதம் பிரான்சில் ஆரம்பமாகவுள்ளன. இப்போதுள்ள பிரச்சினை என்னவெனில் - ஜஸ்ரின் ஹெனின் இந்தவருட ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளில் கலந்து கொள்வாரா இல்லையா என்பதுதான். ஏனெனில், கடந்த மூன்று வாரங்களாக விஷக்காய்ச்சல் ஒன்றினால் பாதிக்கப்பட்டிருந்த இவர், தற்போதுதான் மீண்டும் பயிற்சியை ஆரம்பித்துள்ளார். ஆனாலும்கூட பிரெஞ்ச் ஓப்பனில் இவர் கலந்துகொள்ள வேண்டிய முதலாவது போட்டி மே 24 ஆம் திகதிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



ஹெனின்
"முதல் பாரிஸ் பின் லண்டன்"


ஆனால், மாபெரும் நிகழ்ச்சிக்கு தன்னை தயாராக்கிக்கொள்ளும் அளவிற்கு இவர் உடல் தகைமை பெறுவாரா? உடல் தகைமையை பெற்றதும் பயிற்சிக்கான காலம் போதுமா என்பன போன்ற முக்கியமான வினாக்கள் எழுப்பப்படுகின்றன.

ஜஸ்ரின் ஹெனின் ஜனவரி மாதத்தில் அவுஸ்திரேலிய ஓப்பன் ரெனிஸ் சாம்பியன் பட்டத்தை கிம் கிளிஸ்ரஸைத் தோற்கடித்து வென்றுகொண்டவர். அதன்பின் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் நடைபெற்ற ரென்னிஸ் போட்டியொன்றில் அரை இறுதி வரையே முன்னேறியிருந்தார். ஆனால், அவருக்கு முக்கியமானது பிரெஞ்ச் ஓப்பன் ரென்னிஸ். இவ்வாரம் உலக ரென்னிஸ் சம்மேளனத்தின் தரக்கணிப்பின்படியும் இவரே உலகின் தரம் ஒன்று ரென்னிஸ் வீராங்கனையாக இருக்கின்றார். இதனைத் தக்கவைக்க பிரெஞ்ச் ஓப்பன் முக்கியம். இதனை வெல்வாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.

- ஜெயா -

# ஆவணியில் திருவிழா

இன்னும் நூறு நாள்கூட இல்லை. ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸ் 2004 ஆரம்பிக்க. ஆனால், இங்குள்ள குழப்பம் என்னவெனில் - 1997 ஆம் ஆண்டில் கிரேக்க நாடு 2004 ஒலிம்பிக்போட்டிகளை நடத்தலாம் என்று சர்வதேச ஒலிம்பிக் குழு அனுமதி வழங்கியும், 2000 ஆம் ஆண்டுவரை வேலைகள் எதுவும் ஆரம்பிக்கவில்லை என்றே கூறலாம். இன்றுவரையில் நிறைவு பெற்றிருக்கவேண்டிய 38 அரங்குகளில் 24 மட்டுமே பூர்த்தியடைந்தநிலையில் உள்ளது. ஆனால், போட்டிகள் ஒகஸ்ட் 13 இல் மாற்றமுடியாது.




கடந்தவாரத்தில் கிரேக்கத்தின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்ற கொஸ்ராஸ் கரமனலிஸ் அவர்களுக்கு இது பெரியதொரு தலையிடியாகவும் சவாலாகவும் போய்விட்டது. ஒருபுறம் பணவீக்கப் பிரச்சினை. 27 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் என்று திட்டம் போட, அது 300 பில்லியன்களுக்கு மேலால்போய் நிற்கிறது. இது ஒருபுறம் இருக்க தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்கள் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளைப் பாதித்துவிடுமோ என்ற அச்சம் இன்னொருபுறம் இதற்கு ஆதாரம் அமெரிக்க வீரர்கள் மத்தியில் ஏதென்ஸ் செல்வதில் ஏதேனும் ஆபத்து தமக்கு வந்துவிடுமோ என்று பயப்படுவது.

என்னவோ 2000 ஆம் ஆண்டில் அவுஸ்ரேலிய சிட்னி நகரில் ஒலிம்பிக்போட்டிகள் நடைபெற்றபோது, இந்தளவு பரிதவிப்பும், பதகளிப்பும் இருந்ததாகத் தெரியவில்லை. இன்றுவரை சிட்னி ஒலிம்பிக்பற்றி பேசிப்பேசி ஆச்சரியமடையும் வகையிலேயே அவை அமைந்திருந்தன. ஆனால், ஒலிம்பிக் போட்டிகளின் தாயகத்துக்கு ஒலிம்பிக்போட்டிகளுக்குச் செல்லும் போது எத்தனை தடைகள்.

ஒருசில வசதிக்குறைவுகள், திட்டங்கள் பூர்த்தியாகாமை போன்ற குறைபாடுகள் இருந்தாலும், எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறப்போவது என்னவோ நிச்சயம். அதுவும் நல்லதாக நடந்தால், மகிழ்ச்சி என்பதே உலகவிளையாட்டு ரசிகர்களின் விருப்பம்.

- நந்தா -

# விடவே முடியாது



மொறிஸ் கிறீன்
"தங்கமே தங்கம்"

மொறிஸ் கிற ன் - சிட்னி ஒலிம்பிக் நூறு மீற்றர் குறுந்தூரத் தங்கப் பதக்கத்துக்கு உரியவர். இந்த வேகமான மனிதருக்கு உபாதைகளுக்குக் குறைவில்லை.எந்த உபாதை இருந்தாலும், ஜப்பான் கிரோன் பிரீ தடகள நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வேன் என்று அறிவித்துள்ளார் கிறீன். ஜப்பானில் நான் எனது முழுத்திறமையையும் காட்டுவேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எனது முதன்மையான இலட்சியம் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் நூறு மீற்றர் தங்கத்தை தக்கவைத்துக்கொள்வதுதான். நான் உலகசாதனை நேரத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், தங்கத்தை வெல்வதே என் இலட்சியம். தங்கம் வெல்வதினூடே சாதனை படைக்கமுடியுமாயின், அது சந்தோசமானதுதான் என்கிறார் கிறீன். கடந்த மாதம் ஐக்கிய அமெரிக்க உள்ளக தடகளப் போட்டிகளில் தனது காயங்கள் காரணமாக கலந்துகொள்ள இயலாமல் போனமைக்கு 29 வயதான மொறிஸ் கிறீன் மிகவும் கவலைப்படுகிறார். எதென்ஸ் காய்ச்சல் நெருங்க நெருங்க, வீரர்கள் துரும்பைக்கூட விடத்தயாரில்லை என்பதை இவரின் வார்த்தைகள் காட்டிநிற்கின்றன. இதேவேளை நூறு மீற்றர் 6 பெண்களின் குறுந்தூர ஓட்டம் பற்றிப் பேசும்போது, மரியம் ஜோன்சுடன் இணைத்து கிறிஸ்ரல் கெயின்ஸ், ரோரி எட்வட்ஸ், சுசந்திகா ஜயசிங்க ஆகியோரின் பெயர்களும் பலமாக அடிபடுகின்றன.

- மதி -

# இம்முறை எதிர்பார்த்தோம்



கிளிஸ்ரர்ஸ்
"லண்டனே இலட்சியம்"

கடந்த வருடம் பிரெஞ்ச் ஓப்பன் ரெனிஸ் போட்டியின் இறுதிப் ஸ்ரின் ஹெனின்யிடம் தோல்வி கண்டவர் கிம் இந்த வருடம் எப்படியாவது எல்லோரையும் வயதான இவர், சம்பியன் பட்டம் பெற முயற் என்றே எல்லோரும் நினைத்தார்கள். அதுதான் யதார்த்தமாகவும் இருக்கும். ஆனால், ஜஸ்ரின் ஹெனின் எவ்வாறு உபாதைகளுக்கு உள்ளாகி, பிரெஞ்ச் ஓப்பன் கிண்ணத்தை ஏக்கத்துடன் பார்க்கிறாரோ, அதேநிலையில் கிளிஸ்ரர்ஸும் நிராசையாகப் பார்க்கும்நிலை ஏற்பட்டுள்ளதுதான் துரதிர்ஷ்டம்.

இவருக்கு மணிக்கட்டில் ஏற்பட்ட காயத்திலிருந்த தற்போதுதான் சுகமடைந்து, ஜேர்மன் ஓப்பன் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளார். இருந்தபோதும், அடுத்துவரும் பிரெஞ்ச் ஓப்பன் போட்டிகளுக்குத் தான் நூறு வீதம் தகுதியாக இருப்பேன் என்று ஐயுறுகின்றார். இருந்தாலும் ஒரு சந்தர்ப்பத்தில் இம்முறை பிரெஞ்ச் ஓப்பின் போட்டிகளில் கலந்துகொள்ளவே முடியாமல் போகுமோ என்ற அச்சத்தில்தான் இருந்ததாகவும், ஆனால் தற்போது அந்த அச்சம் நீங்கிவிட்டதாகக் கூறுகின்றார்.

இறுதியாக ஜூன் மாதத்தில் ஆரம்பமாகவிருக்கும் விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகள் பற்றிப் பேசுகிறார். கிளிஸ்ரர்ஸ் - பிரெஞ்ச் ஓப்பன் போட்டிகளில் என்னால் இயன்றளவு திறமையைக் காட்டுவேன். ஆனால், எனது இலக்கு விம்பிள்டன் போட்டிகள் தான். அதில தான் எனது முழுத்திறமைகளையும் காட்டி, கிண்ணத்தைப் பெறமுயல்வேன் என்கிறார் கிளிஸ்ரர்ஸ். அப்படியானால், இம்முறை பிரெஞ்ச் ஓப்பன், ரெனிஸ் கிண்ணம் பெல்ஜியம் நாட்டுக்கு இல்லைப்போலவே தோன்றுகின்றது.

- ஜெயந்தி -

# பொட்டு வைத்த முகமோ



லீ - "மஞ்சள் முகமே"

இந்தியாவில் இந்திய வீரர்களுக்கு எதிராக பந்துவீச நான் மிகவும் ஆவலாக இருக்கிறேன். அவுஸ்ரேலியாவில் இந்திய அணி வந்து ஆடியபோது, நான் முழு உடல் தகுதியோடு ஆடவில்லை என்பது உண்மைதான். அதனால்தான், என்னால் அந்த தொடரில் ஒன்றும் சாதிக்கமுடியவில்லை.

ஆனால், அதற்குப் பிறகு கணுக்காலில் அறுவை சிகிச்சை செய்துகொண்டு அந்த காயத்திலிருந்து குணமடைந்து வருகிறேன் என்கிறார் அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரட்லீ. எனவே, இந்திய ஆடுகளங்களில் என்னால் சிறப்பாகப் பந்து வீசமுடியும் என்று நான் நம்பிக்கையோடு இருக்கிறேன்.

இந்திய ஆடுகளங்கள் பொதுவாக துடுப்பாட்டக்காரர்களுக்கும், சுழல் பந்துவீச்சாளர்களுக்கும் உறுதுணையாக உள்ளன. இங்கு வேகப் பந்துவீச்சாளர்கள் பெரிதாகச் சாதித்ததில்லை என்பது உண்மைதான். ஆனாலும் அதிலும் ஒரு வீரர் விதிவிலக்காக விளங்குகின்றார். அவர்தான் இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ்.

அவர் டெஸ்ட் போட்டிகளில் 434 விக்கெட்டுகளை வீழ்த்திருக்கிறார். அதில் சரிபாதி அளவு எண்ணிக்கையிலான விக்கெட்டுகளை இந்திய ஆடுகளங்களி லிருந்துதான் அறுவடை செய்திருக்கிறார். அவரைப் போலவே என்னாலும் இந்த மந்த மான ஆடுகளங்களில் சிறப்பாக பந்து வீசமுடியும். அப்படி பந்துவீச வேண்டுமென்று நான் மிகவும் விரும் புகிறேன்.

இந்திய அணியின் வலிமையான பேட்டிங் ஆர்டரை எதிர்கொள்வது என்பது எங்களுக்கு கடுமையான சவால்தான். அந்த கடுமையான சாவலைத்தான் நாங்களும் விரும்புகிறோம். அதனால், ஒக்ரோபரில் நடைபெறவுள்ள இந்த தொடரை ஆஸி. வீரர்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறினார்.

உலகின் அதிவேக பந்துவீச்சாளர் என்ற புகழோடு வலம்வரும் பிரட்லீக்கு தற்போது 27 வயதாகிறது. இதுவரை 37 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள அவர், அவற்றில் 139 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்தியாவில் ஒக்ரோபரில் நடைபெறவுள்ள இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்று, அந்த வெற்றியை ஆஸி. அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீவ் வோவிற்கு சமர்ப்பிக்க விரும்புவதாகவும் பிரட்லீ தெரிவித்தார்.

ஸ்ரீவ்வோ எங்கள் அணிக்கு கிடைத்த சிறநத அணித்தலைவர். இந்தியாவில் டெஸ்ட் தொடரை வெல்லவேண்டும் என்பது அவருடைய நீண்டநாள் விருப்பம். அவருடைய தலைமையின்கீழ் ஆஸி. அணி அதை சாதிக்க தவறிவிட்டது.

எனவே, அவருக்காகவாவது நாங்கள் இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என்று விரும்புகிறோம். அண்மையில் ஓய்வுபெற்றுள்ள அவருக்கு அந்த வெற்றியைப் பரிசாக அளிக்கவேண்டும் என்பது என்னுடைய அவா என்கிறார் பிரட்லீ.

மேலும் சிம்பாப்வே பயணம் மேற் கொள்ளவுள்ள ஆஸி. அணியின் வீரர்களின் நலம் குறித்து, தான் பெரிதும் கவலைப் படுவதாகத் தெரிவித்த பிரட்லீ, சிம்பாப்வே செல்லமுடியாது என்று வெளிப்படையாக அறிவித்துள்ள ஸ்டுவர்ட் மேக்கிலின் முடிவை தான் பெரிதும் பாராட்டுவதாகக் கூறியுள்ளார்.

நல்லவேளையாக நான் தற்போது ஆஸி. அணியில் இடம்பெறவில்லை. கணுக்காலில் செய்துகொண்ட அறுவை சிகிச்சை காரணமாக நான் தற்போது ஓய்வில் இருக்கிறேன். இல்லையென்றால் சிம்பாப்வே செல்லக்கூடிய ஆஸி. அணியில் என் பெயரும் இடம்பெற்றிருக்கும். அந்த தர்மசங்கடமான சூழ்நிலையிலிருந்து அதிர்ஷ்டவசமாக நான் தப்பித்துக் கொண்டுவிட்டேன்.

சென்றமுறை இந்தியா வந்த ஆஸி. அணியிலும், சென்ற மாதம் இலங்கை வந்த ஆஸி. அணியிலும் நான் காயம் காரணமாக இடம்பெறமுடியாமல் போய் விட்டது. அதற்காகத்தான் நான் மிகவும் வருத்தப்பட்டேன். சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரில் அடுத்த மாதம் என்னால் ஆடமுடியாமல் போனதில் எனக்கு மிகவும் மகிழ்ச் சிதான் என்று பிரட்லீ கூறிமுடித்தார்.

- லலிதா -

யாழ்ப்பாண நூலகம்


Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# உண்மையான வார்த்தைகள்

டெண்டுல்கர் தனது ஆட்டத்தில் பழைய உத்வேகத்தை மீண்டும் வெளிப்படுத்த வேண்டும் என்று அவுஸ்ரேலிய முன்னாள் தலைவர் பொபி சிம்சன் கூறியுள்ளார்.

தற்போது இந்தியா வந்திருக்கும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மற்றும் பயிற்சியாளருமான பொபி சிம்சன் தன்கருத்தில்-

சச்சின் டெண்டுல்கரின் ஆட்டப்பாணியில் எந்த தவறும் இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால், அவர் தனது பழைய உத்வேகத்தைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். அவருக்கு எந்தநேரத்தில் ஆட்ட ஆலோசனை தேவைப்பட்டாலும் வழங்கத்தயாராக இருக்கிறேன்.



சச்சின் -"என்னை வாழ்த்துங்கள்"

இந்திய அணியின் வெற்றிக்குக் கப்டன் கங்கூலி, பயிற்சியாளர் ஜோன்ரைட் ஆகியோர் முக்கிய காரண கர்த்தாவாக விளங்குகிறார்கள். ஜோன்ரைட் பயிற்சியாளர் பதவியை மிகச்சிறப்பாக செய்துவருகிறார். அவரை அந்தப் பதவியில் இன்னும் சில ஆண்டுகள் நீடிக்கச்செய்யவேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். இந்திய அணியைப் பட்டைதீட்டியதில் அவரது பங்கு முக்கியமானதாகும். அவருக்கு இந்திய கிரிக்கெட் நிச்சயம் பணிநீடிப்பு வழங்கும் என்று நம்புகிறேன்.

பாகிஸ்தான் பயணத்தில் இந்திய அணியின் களத்தடுப்பு முன்னேற்றம் கண்டு உள்ளது. இன்னும் முன்னேற்றம் தேவையாகும். 'கேட்ச்'கள் போட்டி வெற்றியை நிர்ணயிக்கக் கூடியவையாகும்.


ஒக்ரோபர் மாதத்தில் இந்தியாவரும் அவுஸ்ரேலியா அணியை வெல்லவேண்டும் என்றால், இந்திய அணி எல்லாத்துறையிலும் முன்னேறவேண்டும். உலகின் சிறந்த அணியை, சரியான இணை மற்றும் கடினமான உழைப்பு இல்லாமல் வீழ்த்துவது என்பது எளிதான காரியம் அல்ல.

சர்ச்சைக்குரிய பந்துவீச்சு குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கவனம் செலுத்தி, வருங்காலத்தில் செயற்திட்டம் உருவாக்கவேண்டும்.

- யாழினி -

# ஒரு முடிவுக்கு வாங்கப்பா

சர்வதேச கிரிக்கெட் - காலத்துக்குக் காலம் பல்வேறு ஏற்ற இறக்கங்களைக் கண்டு வந்தள்ளது. 1930 இல் இங்கிலாந்தின் அவுஸ்ரேலியாவிற்கு எதிரான **Body Line Bowling** தொடர், பின்னர் 1970 களில் கெரிபெக்கர் தொடர் - அந்தவகையில் தற்போது சர்வதேசக் கிரிக்கெட் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினை சிம்பாப்வே அணித் தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சை. தற்போதைய பிரச்சினை எல்லோரும் அறிந்ததே. அதோடு, இணைந்து சராசரி 21 வயதுடைய சிம்பாப்வே அணி - இலங்கை அணியுடன் தாக்குப்பிடிக்க முடியாமல் போனமை கிரிக்கெட் விமர்சகர்கள் மத்தியில் பெரும் ஆதங்கத்தை ஏற்படுத்தியிருப்பதை அறிய முடிகிறது. ஏனெனில், சிம்பாப்வே கிரிக்கெட் சபை புதிய அணியொன்றை சவாலாக அறிமுகப்படுத்தி, எதையும் சாதிக்க இயலவில்லை என்பது பிரச்சினையை இன்னும் அதிகப்படுத்திவிட்டது.



தைபு -"ஏதோ என்னால் முடிந்தது"

சிம்பாப்வே அணி காலத்துக்குக் காலம் பின்னடைவுகளைச் சந்தித்ததே வந்துள்ளது. 1999 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் முடிவடைந்த கையோடு, நீல் ஜோண்சன் மற்றும் மர்ரே குட்வின் இருவரும் தங்கள் எதிர்காலம் சிம்பாப்வேயில் இல்லை என்றுணர்ந்து இங்கிலாந்துக்கும், அவுஸ்ரேலியாவிற்கும் சென்றுவிட்டார்கள். பின்னர் 2003 இல் உலகக் கிண்ணப்போட்டிகள் முடிவடைந்த கையோடு அன்டி பிளவர், ஒலங்கா இருவரும் அரசியல் சர்ச்சையால் நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

தற்போது முற்று முழுதானதொரு வீழ்ச்சிப் பாதையில் சிம்பாப்வே காணப்படுகிறது. சர்வதேசக் கிரிக்கெட் சிம்பாப்வேயைப் பொறுத்தவரை இருண்டதாகக் காணப்பட, கறுப்பின மக்கள் மத்தியில் தம் இனத்தவரை பெரும்பான்மையாகக் கொண்ட அணி அமைந்தது மகிழ்ச்சிகரமானதாகவும் தெரிகின்றது. ஆனால் உண்மை என்னவெனில், சிம்பாப்வேயின் சர்வதேசக் கிரிக்கெட் என்பது இரண்டாம் நிலைக்குத் தாழ்ந்து போயுள்ளது என்பதுதான்.

இதோடு இணைந்து பங்களாதேஷ் பக்கமாகவும் விமர்சகர்கள் தம் பார்வையைத் திருப்புகிறார்கள். மிகவும் தரம் குறைந்திருந்த பங்களாதேஷ் நாட்டுக்கு, டெஸ்ட் அந்தஸ்த்துக் கொடுத்தமையும், இன்றுவரை பங்களாதேஷ் எந்த வகையிலும் அந்தத் தரத்தை பேண இயலவில்லை என்பதும் கோபமாக வெடிக்கிறது.

இந்த விடயங்கள் தொடர்பில் **ICC** மௌனம் சாதிப்பது எல்லோருக்கும் பெரும் சலிப்பைக் கொடுத்துள்ளது. இவர்கள் காத்திரமான பங்கு வகிப்பதன்மூலம், சர்வதேச கிரிக்கெட்டைக் காப்பாற்றமுடியும் என்பதே இவர்களின் வாதம். ஒரு விமர்சகர் முதுகெலும்பு இல்லாத **ICC** யால் முகாபேயை எதிர்க்கவே முடியாது என்று குமுறுகிறார்.

சிம்பாப்வே ஆட்சியாளர்கள் - கறுப்பின வீரர்களை முற்றும் முழுதாக உள்வாங்கவேண்டும். வெள்ளை இன வீரர்களை அணியிலிருந்து நீக்கவேண்டும் என்றும் அடம்பிடிக்கிறார்கள் என்பதும் ஒரு குற்றச்சாட்டு. இறுதியாகக் கருத்துக்கூறும்போது - சிம்பாப்வே இரண்டு டெஸ்ட் தொடர்களைச் சந்திக்கப்போகிறது. ஒன்று இலங்கையுடன், அடுத்தது அவுஸ்ரேலியாவுடன் இரண்டிலுமே சிம்பாப்வே அணி "பலிபீடத்தில்" நிற்பதுபோலத்தான் உணரப்போகிறது, அனுபவப் படப்போகிறது என்று முடிக்கிறார் விமர்சகர்.

- பிரியா -

# அனுபவம் புதுமை



கங்கூலி - "கையில் கவசம்"

**தா**ன் விளையாடியுள்ள மிகச் சிறந்த டெஸ்ட் தொடர்களில் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரும் ஒன்று என்று இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் கங்கூலி தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் பயணத்திற்கு முன்னர் அச்சம் ஏற்படுத்தும் விதமாக பல விடயங்கள் விவாதிக்கப்பட்டாலும், நான் விளையாடிய மிகச்சிறந்த தொடர்களில் இந்த தொடரும் ஒன்று என்று கங்கூலி கருத்து தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்துகொண்ட கங்கூலி அளித்தபேட்டியில் - 'பாகிஸ்தான் பயணமானது எங்களுக்கு நல்ல அனுபவத்தை கொடுத்துள்ளது. இந்த பயணம் செல்வதற்கு முன்னர் நாங்கள் மிகவும் கவலைப் பட்டது உண்மைதான். ஆனால், பாகிஸ்தான் மண்ணை மிதித்தவுடன் எங்களுடைய பயம் எல்லாம் தொலைந்துவிட்டது. ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு மேலாக அங்கு இருந்தோம். இந்த காலகட்டத்தில் அங்கு விளையாடிய தொடரானது நான் விளையாடிய மிகச்சிறந்த தொடர்களில் ஒன்றாக மாறிவிட்டது என்று கூறினார்.

இந்திய கிரிக்கெட்டில் வெற்றிகரமான அணித்தலைவராக உருவாகி இருப்பதற்கான ரகசியம் பற்றிக் கங்கூலி கூறுகையில் - 'ஒரு அணி உயர்வதற்கும், முன்னேறுவதற்கும் கப்டன் மட்டுமே பொறுப்பு அல்ல. அணியில் இடம்பெற்று இருக்கும் 14 வீரர்களுமே அணியின் முன்னேற்றத்திற்கு முக்கிய பங்கு வகிக்கின்றனர். இதனடிப்படையில் அணியில் மிகத்திறமையான வீரர்கள் இருப்பது என்னுடைய அதிர்ஷ்டம் ஆகும' என்று கூறினார். சச்சின் டெண்டுல்கர், டிராவிட், ஷேவாக், லட்சுமண் ஆகியோர் அணியின் முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகிப்பதாகக் கூறிய கங்கூலி, வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவிருக்கும் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான தொடரை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகக் கூறினார்.

சர்வதேச கிரிக்கெட்டில் தற்போது இருக்கும் மிகச்சிறந்த அணி அவுஸ்ரேலியா. மிகச்சிறந்த அணிக்கு எதிராக விளையாடுவது என்பது எப்போதுமே மிகப்பெரிய விடயம். கடந்த இரண்டு முறை ஆஸிக்கு எதிராக நாம் விளையாடியபோது மிகச் சிறப்பாக விளையாடி இருக்கிறோம். இதைத் தொடர்வோம்' என்று கூறினார்.

கங்கூலி மேலும் கூறுகையில், கடந்த காலங்களில் நான் நிறைய விரதுகளை வென்றுள்ளேன். ஆனால், அணியின் வெற்றிக்காக நான் பாராட்டப்படுவது என்பது மிகச் சிறந்த விடயமாகும் என்று கங்கூலி கூறினார்.

- கஜா -

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய பந்துவீச்சாளர்கள் யாவர்?
02. இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டித் தொடரைக் கைப்பற்றிய அணி யாது?
03. அண்மையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட ஆஜென்ரீன கால்பந்து அணியின் முன்னாள் தலைவர் யார்?

**விளையாட்டுப் புதிர் - 10**

**விண்ணப்பப்படிவம்.**

முழுப்பெயர்:- ..................................................

முகவரி:- ..................................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 14.05.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 10,*
*நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

## விளையாட்டுப் புதிர் இல. 09 இன் விடைகள்

1) தைபு,
2) மாவன் அத்தபத்து.
3) ஷேவாக்.

**பரிசு பெற்றவர்**
ஆ. அஜிந்தன்
4 ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை.

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
(விளையாட்டு உபகரண விற்பனையாளர்)
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2227648, 0777166894.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sport

செய்திக் கட்டுரை

கண்ணன்


சேவையில் ஈடுபடும் பயணிகள் படகு


# நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கு உரிய வழி ஏற்படுவது எப்போது ......?

நெடுந்தீவு மக்கள் தங்களது அன்றாட கடமைகளை நிறைவேற்ற, தேவைகளைப் பூர்த்திசெய்ய யாழ். பெருநிலப்பரப்பினையே நம்பி, தங்கி வாழ்கின்றமை சகலரும் அறிந்தவிடயம். இந்தத் தேவைகளை நிறை வேற்ற பெருங்கடல் தாண்டிப் பயணிக்கவேண்டும். இந்தப் பெருங் கடல் தாண்டிப் பயணிப்பதற்கு படகுகள் தேவை. அவை கடந்த பல வருடங்களாக சீரான சேவையை வழங்கமுடியாமல், மக்களும் தங்கள் தேவைகளை நினைத்தவுடன் நிறைவேற்றமுடியாமல் தவிக்கின்ற நிலைமை தொடர்கிறது.

இந்தப் பகுதிக்கு ஒரு சீரான படகுசேவை விரைவில் ஏற்படுத்தப் படவேண்டும். இல்லையெனில், பாதுகாப்பற்ற படகுகளில் பயணித்து, அண்மையில் ஒரு இளைஞர் தவறி வீழ்ந்து காணாமற் போனதுபோன்று, பெருமளவு பயணிகளுடன் செல்லும்போது - கடும் காற்று, கடற் கொந்தளிப்பு ஏற்பட்டு ஒரு துயர நிகழ்வு நடைபெறுமாயின், அது தொடர்பாகப் பொறுப்பேற்பது யார் என்ற கேள்வி எழவே செய்யும்.

### அதிகாரிகளின் அசமந்தப் போக்கு

நெடுந்தீவின் முக்கிய போக்குவரத்து ஊடகம் கடற்போக்குவரத் தென்பது அறிந்தவிடயம். ஆரம்ப காலத்தில் பல அரச படகுகள் சேவையில் ஈடுபட்டபோதும், தற்போது சேவையில் 'குமுதினி' படகு மட்டும்தான் ஈடுபட்டது. அதுவும் தற்போது சேவையில் இல்லை. இது தொடர்பாக அரச அதிபர் முதல் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தீவின் போக்குவரத்து நிலைமை தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் தெரிவித்தும், நடவடிக்கை எடுக்கப் படுவதாகத் தெரியவில்லை.

குமுதினிப் படகின் தோற்றம்


அண்மையில் யாழ். அரச அதிபர் குழுவினர் - நெடுந்தீவு வந்து சென்றபோது மக்கள் படும் துயரம் புரிந்திருக்கும். அவர் வரும்போது, கொழுத்தும் வெயிலில் வந்து, செல்லும்போது கொட்டும் மழையிலே நனைந்து சென்றார்.

இந்தப் பகுதி மக்களின் திறந்த படகுப்பயணத்தில் - மாறிமாறி வரும் அசௌகரியங்களை, ஒரே நாளிலே இயற்கை எடுத்தியம்பியமை குறிப்பிடத்தக்கது.

இது மட்டுமன்றி, நெடுந்தீவின் அபிவிருத்தி தொடர்பாக பல அமைப புக்கள் அரச அதிபருக்கு மகஜர்கள் கையளித்தன. அவற்றிலே முக்கிய இடம்பிடித்தன. படகுசேவையே குமுதினிப் படகு சேவையை இனியும் நம்பி காலத்தை ஓட்டமுடியாதநிலை, அந்தளவுக்கு அது உருக்குலைந்து போயுள்ளது.

இதனால் புதியதொரு இயந்திரப் படகினை சேவையில் ஈடுபடுத்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இதற்கொரு வழிசமைக்கவேண்டும்.

### வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மெத்தனப்போக்கு

தரைவழியால் தொடர்புபடுத்தி பாலம் போட்டு வீதிபோட முடியாத இடங்களுக்கு, படகுமூலம் செய்ய வேண்டிய ஒரு சபை இச்சேவையினை மானிய அடிப்படையில் தான் செய்யவேண்டிய ஒரு நியதியும் உண்டு. கட்டணம் செலுத்துவதில் மக்கள் எதிர்க்கவில்லை. சீரான படகு சேவையைத்தான் எதிர்பார்க்கின்றார்கள்.

எத்தனையோ படகுகள் சேவையில் ஈடுபட்டு, நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாகவும், போதிய பராமரிப்பின்றியும் செயலிழந்து, இன்று ஒரு குமுதினிப் படகினை வைத்து நெடுந்தீவு மக்களுக்கு பூச்சாண்டிகாட்டும் விதமாக ஒரு மாதம் சேவையும், மறுமாதம் திருததும் முகமாகக் காலத்தை ஓட்டிச் செல்கின்றது.

தீவுக்கான படகுச்சேவைக்கு புதிய படகு தேவையென்று கோரிக்கைகள் விடப்படவில்லையா? அன்றி அக்கோரிக்கைகள் உரியவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லையா?

### நெடுந்தீவு பல நோ. கூ. சங்கப்படகு சேவை

குமுதினிப்படகு சேவை வாரத்தில் வியாழக்கிழமைகளில் ஓய்வெடுக்கும். சிலநேரம் மாதக்கணக்கில், வருடக்கணக்கில் ஓய்வெடுக்கும்.

நெடுந்தீவுப்பகுதி மக்களின் போக்கு வரத்திற்கு உதவி வருவது நெடுந தீவு பல. நோ.கூ. சங்கத்தின் சமுத்திராதேவி, உதயதாரகை ஆகிய படகுகளே. இதன் சேவையினை மக்கள் என்றும் நன்றியுணர்வோடு ஏற்றுக் கொண்டு வருகின்றனர்.

அடிக்கடி பழுதடையும் சமுத்திராதேவி படகு


இந்த வகையில் பயணிகள் படகு சேவையை நடாத்தும் சங்க நிர்வாகம் - அனுபவ முள்ள படகோட்டிகள், இயந்திர இயக்குநர்கள், சிப்பந்திகள் என மக்களைக் கரைசேர்கும் பாரிய பொறுப்பைச் சிறப்பாக நிறைவேற்றக் கூடியவர்களைப் படகிலே வேலைக்கமர்த்த வேண்டும்.

இந்த இடத்தில்தான் தவறுகள் விடப்படுகின்றது. படகோட்டி - அனுபவமுள்ள, திறமையான அனுமதிப் பத்திரமுள்ளவராக இருப்பினும், சிப்பந்திகள் நீச்சல்கூட தெரியாதவர்களாக இருப்பதுதான் கவலைக்குரியது.

ஏனோ தானோவென வரையறுத்த சம்பளத்தில், யார் கிடைப்பார்களோ அவர்களை வேலைக் கமர்த்தும் நிலைதான் தொடர்கின்றது.

இதிலே இன்னும் வேடிக்கையான விடயம் - நிரந்தரமாக நிற்கும் சிப்பந்திகள் விடுப்பில் சென்றால், அதற்குப் பதிலாக கடல் அனுபவமற்ற கூட்டுறவுக் கிளைகளில் பணியாற்றும் கூலியாட்களையும், தலைமைச் செயலகக் காவலாளிகளையும் படகிலே அனுப்புவதுதான்.

இந்த நிலைகள் மாற்றப்பட்டு, அனுபவமுள்ளவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என மக்கள் மத்தியில் அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது. கச்சதீவுத் திருநாளுக்கு செல்லும் படகுக்கென கடற்படையினர் இவ்வருடம் 400 நீச்சல் அங்கிகள் வழங்கினார்கள். திருநாள் முடிந்ததும் மீளப் பெற்றுக்கொண்டார்கள்.

பயணிகள் படகு எனும் பெயர் தான் - இந்தப் படகுகளில் பாதுகாப்பு நீச்சல் அங்கிகள் இல்லை. படகுப் பணியாளர்களிடமும் நீச்சல் அங்கிகள் இல்லை. எப்போது என்ன நடக்கும் எனத் தெரியாத கடற் பயணத்தில், தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கொண்டுசெல்லப்படவேண்டியது அவசியம். அதனை உரியவர்கள் நிறைவேற்றுவார்களா? இதனை யார்? எப்போது? நிறைவேற்றுவார்கள் என்பதுதான்...???

◆◆

ஒரு கண்ணோட்டம்....

துர்வாசர்

# தென்பகுதி ஆங்கில நாளிதழ்களும் புலிகள் தொடர்பான பார்வைகளும்

சில காலங்களுக்கு முன்புவரை தேசியப் பத்திரிகை என்று சொல்லப்படுகின்ற சிங்கள, ஆங்கில செய்தித்தாள்களிலே LTTE அதாவது புலிகள் தொடர்பான 'காட்டூன்' ஏதாவது வரையப்பட்டால், வரிப்புலியை வரைந்து நிச்சயமாக அதன் நெற்றியிலே ஒரு பெரிய பொட்டும் வைத்து, புலி என்றாலே பொட்டு வைத்த தமிழன் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கி, தங்கள் வக்கிரங்களை தீர்த்துக் கொள்வார்கள்.

அதன் கால் அல்லது வாலில் கட்டுப் போட்டிருக்கும். வாலில் சில வேளை ஒரு வெள்ளைக்கொடியும் பறக்கும் அல்லது ஒரு காலின் கீழ் ஊன்றுகோல் ஒன்று இருக்கும் அல்லது மனித மண்டையோடுகள், எலும்புகள் நடுவே படுத்திருப்பதுபோல் காட்டப்படும்.

மண்டையோட்டு சிம்மாசனத்தில் பிரபாகரன் அமர்ந்திருக்க, மண்டையோட்டு மாலை போட்ட மெய்ப்பாது காவலர் காவலுக்கு நிற்பதாக சித்தரிக்கப்படும்.

கட்டுரைகளில் பந்திக்குப் பந்தி ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் "புலிப்பயங்கரவாதிகள்" என்ற பதப் பிரயோகத்தைப் பயன்படுத்துவார்கள். விதிவிலக்கு இல்லாமல் முழு ஆங்கில, சிங்கள மற்றும் உபாலி, லேக்ஹவுஸ் தமிழ் பத்திரிகைகளில் இந்த நடைமுறையே கைக்கொள்ளப்பட்டது.

எங்காவது ஒரு சம்பவம் நடந்து விட்டால், உடனடியாகவே புலிகள் மீது பழி விழும். பெரிய எழுத்துக்களில் புலிகள்தான் அதனைச் செய்ததாக உறுதிப்படுத்திய தகவல் போன்று தலைப்புகள் வரும்.

உதாரணமாக - சீன மீன்பிடிப் படகுகள் திருமலை அருகே தாக்கப்பட்டதைக் கூறலாம். படகுகள் தாக்கப்பட்டதாகச் செய்தி வந்ததும், ஐலண்ட் பத்திரிகை - "புலிகளின் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் - மீன்பிடிப் படகு மூழ்கடிப்பு" என்று செய்தி வெளியிட்டது.

நின்று பார்த்ததுபோல் அந்தச் செய்தி அமைந்திருந்தது. பின்னர் கண்காணிப்புக்குழு 3 ஆவது தரப்புப் பற்றிக் கூறிய பொழுது, ஐலண்ட் பத்திரிகைகள் ஆஙகில, சிங்கள பத்திரிகைகள் SLMM மீது பாய்ந்தன. படகுகளை தாம் தாக்கவில்லை என்று அரசு சொன்னதை அப்படியே வேதவாக்காக எடுத்துக்கொண்ட இப் பத்திரிகைகள்- தாங்கள் தாக்கவில்லை என்று புலிகள் தெரிவித்தபோது, பொய்' என்று கூறிவிட்டன.

**ஆக்கிரமிப்பாளரிடமிருந்து போரில் கைப்பற்றிய இப்பகுதிகளில் தங்கள் முறையில் நிர்வாகம் செய்ய புலிகளுக்குச் சகல உரிமையும் உண்டு. இப்பொழுது கிளிநொச்சி நோக்கி இராஜ தந்திரிகள் படையெடுப்பது இதனை தேவைக்கு அதிகமாகவே மெய்ப்பித்து விட்டிருக்கிறது.**

தாக்க வந்தவர்கள் தமிழில் உரையாடியதாக, அத்தாக்குதலில் காயமடைந்த ஒரு சிங்களவர் கூறினர். அவர் NARA எனப்படும் அமைப்பில் முன்னர் இருந்தவர். சிறிலங்கா புலனாய்வுத்துறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட அந்த அமைப்பு கடலடி வரை ஆய்வு என்ற பெயரில் கரையோர வேவுகளில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டது.

மேற்படி சீன மீன்பிடிப் படகுகளின் உள்ளூர் முகவராக, அப்போதைய அமைச்சர் ஒருவரின் மனைவி இருந்தார். இவ்வாறு வேறு முகவர்களும் இருந்தனர். அதையும்விட இந்த முகவர்களுக்கிடையில் தொழில் போட்டியும் நிலவிவந்தது.

ஆனால், விடுதலைப் புலிகளை தவிர்த்து, வேறு தமிழ் பேசும் "நண்பர்கள்" சிறிலங்காவின் புலனாய்வுத் துறைக்கும் இருக்கிறார்கள் என்பது இந்தப் பத்திரிகைகளுக்கு ஏதோ உறைக்கவில்லை.

மேலதிகமாக ஒரு தகவல்: இத்தாக்குதல் நடந்த போது, சம்பவ இடத்துக்கு சமீபமாக, சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமான றோலர் ஒன்று தொழிலில் ஈடுபட்டி ருந்தது. தாக்குதல் தொடங்கியதும் அவர் ஆழ்கடலுக்கு சென்றுவிட்டார். அடுத்தநாள் காலையில் தென் தமிழீழத்தின் கிராமமொன்றுக்கு மீன்களைக் கொண்டு வந்து கொடுத்திருந்தார்.

அந்தப் பிரதேசத்திற்கான புலிகளின் பொறுப்பாளர் அவரை சந்தித்து விவரம் கேட்டபொழுது, தாக்குதல் நடத்திய அதிவேகத் தாககுதல் படகு திருமலைப் பக்கமிருந்து வந்ததாகவும், அதில் சுற்றிவர பாதுகாப்புக்காக இரும்பு வலை பொருத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

புலிகளின் படகுகளில் இப் படி பாதுகாப்பு வலைகள் வழமையாகவே பொருத்தப்பட்டிருப்பதில்லை. எனவே, தாக்குதல் நடத்தியவர்கள் எங்கோ இருக்க - புலிகள் மீதே பழி சுமத்தி, பக்கம் பக்கமாக "ஆய்வாளர்கள்" கட்டுரைகளை எழுதித் தள்ளினார்கள்.

முன்பு இந்தியாவில் சேரமணியன் போன்றவர்கள் கொழும்பு வரை மட்டும் வந்துவிட்டு, புலிகளுக்கு எதிராக கட்டுரைகளைத் தீட்டியது போல் ஓரளவுக்கு புலன் விசாரணை சார்ந்ததாக (Investigative) எழுதும் பிறெட்ரிக்கா ஜான்ஸ் கூட - மட்டக் களப்பு ASP கொடுத்த தகவல்களின் அடிப்படையில் "குழந்தைப் போர் வீரர்" குறித்து இரண்டு பக்கக் கட்டுரையை சண்டேலீடரில் எழுதினார்.

அடுத்து புலிகளின் வரிவிதிப்பு, பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் குறித்து ஏதோ செய்யக்கூடாத படுபயங்கர குற்றங்களைச் செய்து விட்டதாக எழுதுவார்கள். ஆனால், அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள்- இந்தச் செயற்பாடுகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்தான் இடம் பெறுகின்றன. தாங்கள் குருதி சிந்தி, போரில் கைப்பற்றிய இடங்கள் இவை. சிறிலங்கா அரசு இவற்றை தட்டில் வைத்துத் தரவில்லை. இந்தப் பகுதிகளில் சிறிலங்காவின் இறைமை எப்போதோ செல்லாக்காசாகிவிட்டது.

ஆக்கிரமிப்பாளரிடமிருந்து போரில் கைப்பற்றிய இப்பகுதிகளில் தங்கள் முறையில் நிர்வாகம் செய்ய புலிகளுக்குச் சகல உரிமையும் உண்டு. இப்பொழுது கிளிநொச்சி நோக்கி இராஜதந்திரிகள் படையெடுப்பது இதனை தேவைக்கு அதிகமாகவே மெய்ப்பித்து விட்டிருக்கிறது.

அடுத்ததாக இயக்க தளபதிகளின் பதவி நிலைகளைக் குறிப்பிடும் போது, அவர்கள் காட்டும் விதம் இருக்கிறதே... உதாரணமாக கேணல் பானுவை குறிப்பிடவேண்டுமானால் "கேணல்" என்று மேற்கோள் குறியிட்டு, ஏதோ அவர்கள் இந்த நிலைகளுக்கு வரத்தகுதியில்லாதவர்கள் போல் காட்டமுனைவார்கள். இவற்றைப் பார்க்கும்போது வியட்னா மின் புகழ்பெற்ற தளபதியும் டியன்-பியன்-பூவின் கதாநாயகருமான ஜெனரல் வோ நூயென் சியாப் பற்றி - அவரிடம் "வாங்கிக் கட்டிக்" கொண்ட அமெரிக்க தளபதி டேவிட் பி.ஜோண்சன் - 'போர்முனையில் வியட்னாம்" நூலில் சியாப் கல்வி அறிவு குறைந்தவர், மூலோபாயங்கள் பற்றிய அறிவு இல்லாதவர் என்று குறிப்பிட்டது தான் நினைவுக்கு வரும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அணியிலுள்ள கேணல்கள் - சிறிலங்காவின் சாண்ட் ஹேஸ்ற், வெஸ்ற் பொயின்ற், "ஜெனரல்கள்" போல், பெண் புலிகளிடம் வாங்கிக் கட்டவுமில்லை, முகாம்களை கோட்டை விட்ட வீரச் செயலுக்காக பதவியுயர்வுகளைப் பெறவுமில்லை.

ஆனால், இதே பத்திரிகையாளர்கள் அண்மையில் முரளிதரனின் கலகத்தின்போது, அந்த துரோகியை கேணல் கருணா என்று வாய் நிறைய அழைத்து மகிழ்ந்தார்கள். 40 நாட்களில் தாங்கள் எடுத்த வாந்தி முழுவதையும் மீள விழுங்க வேண்டி வருமென்று அவர்கள் கனவில்கூட நினைத்திருக்கமாட்டார்கள்.வழமையாகவே விடுதலைப் புலிகளைப் பற்றி இளக்காரமாக எழுதுபவர் பிரபல "ஆய்வாளர்" இக்பால் அத்தாஸ்.

இராணுவத்தின் இரகசியத் தவலகள் இவருக்கு மட்டும் எப்படியோ பிரத்தியேகமாக கிடைக்கும். ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க உயிரோடு இருந்தவரை அவரது உபயம். அவர் செத்தபின் தான் வீரதுங்கவுக்கு தகவல்கள் தந்ததாக அத்தாஸ் வாய்ச்சவால் அடித்தார்.

ஆனால், முரளிதரனின் விவகாரம் 40 நாட்களில் எதிர்பாரா முடிவுக்கு வந்த பின் 18-04-2004 சண்டேரைம்ஸில் எழுதிய கட்டுரையில், அவருக்கான கேணல் பதவியை அத்தாஸ் கைவிட்டு விட்டார். அதே கட்டுரையில் எம் தேசியத் தலைவரை குறிப்பிடும்போது, முதல் தடவையாக வே. பிரபாகரன் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு ஆரம்பத்துக்கு இது நல்லதொரு மாற்றம்தான். இந்தப் போக்கை தொடர்ந்து அனைத்து விவகாரங்களிலும் கடைப்பிடிப்பார்கள் என்று நம்புவோமாக.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
அளவுஅறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவுஅறிந்தார் நெஞ்சில் கரவு
திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழ்ப் பத்திரிகைகளும் நிருபம் சென்னும்

கடைசியில் இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென் இலங்கையில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகள் தொடர்பான தன் கருத்து நிலைப்பாட்டையும், அவற்றின் மீதான தனது உள்ளக் கொதிப்பையும் ஒருமாதிரி வெளிப்படுத்தி ஆறுதலடைந்து விட்டார் என்றே கூறவேண்டும்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கைகள் குறித்து இங்கு வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் செய்திகள் மற்றும் விமர்சனங்கள் தேவையற்ற வகையிலும், நேர்மையற்ற முறையிலும் உள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ள நிருபம் சென் - இங்கு நடைபெறும் சகல விடயங்களுக்கும் இந்தியாவையே காரணமாக்கி குறைகூறும் செயற்பாட்டையே மேற்கொண்டு வருவதாகவும் ஒரு அபாண்டத்தைச் சுமத்தியுமுள்ளார்.

இதனை வெறுமனே தனிப்பட்ட நிருபம் சென் என்ற மனிதரின் கருத்தாக மட்டும் எடுத்துக்கொள்ள முடியாது. அவர் இந்தியாவின் இலங்கைக்கான இராஜதந்திரப் பிரதிநிதி என்றவகையில், இதனை இந்தியாவின் கருத்து வெளிப்பாடாகவே எண்ணவேண்டியதும் அவசியமாக உள்ளது.

டெங்கு நோய் பரவினாலும், இந்தியாதான் காரணம். ஒருவரின் கால் முறிந்தாலும் அதற்கு இந்தியாவே காரணம் என்று குற்றஞ்சாட்டுவது இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளின் பண்பாகிவிட்டது என்றும் சினம்பொங்க நிருபம் சென் கூறியுள்ளதற்கு உண்மையில் எந்தவிதமான நியாயபூர்வமான அடிப்படையும் இருப்பதாகத் தெரியவில்லை.

இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கையென்பது எப்படியானது என்பதும் காலத்திற்குக் காலம் அது எப்படியாக மாற்றம் கண்டு வந்துள்ளதென்பதும் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்களுக்கோ, ஏன் பொதுமக்களுக்கோ தெரியாத ஒன்றல்ல.

அந்தக் கொள்கை, இந்து சமுத்திரப் பிராந்தியம் மீதான இந்தியாவின் புவிசார் அரசியல் மற்றும் இராணுவ நலன்களுக்கும், மேலாதிக்க ஆளுமைக்கும் முக்கியத்துவம் கொடுத்து வகுக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாக எவராலும் நிராகரிக்க முடியாத உண்மையாகும்.

நிருபம் சென் கூறுவதுபோன்று இலங்கை, இந்திய இரு நாடுகளினதும் தேசிய நலன்களை அடிப்படையாகக் கொண்டதாகவே அந்தக் கொள்கை அமைக்கப்பட்டது என்பதை, கடந்த காலத்தில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறைகளும், தலையீடுகளும் அவற்றின் தாக்கங்களும் எதிரொலிகளும் நிராகரிப்பதாகவே அமைந்துள்ளன.

உண்மையில் இரு நாடுகளினதும் தேசிய நலன்களில் இந்தியா மிகுந்த விசுவாசமானதும், நேர்மையானதுமான அக்கறையினை எவ்விதமான பாரபட்சமுமின்றி கொண்டிருக்குமேயானால் இனப்பிரச்சினை இவ்வளவு சிக்கலாக ஆகியிருக்காது.

இந்திய - இலங்கை உடன்பாடு, இலங்கையின் தேசிய நலன் குறித்த அக்கறையிலோ அல்லது ஈழத் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவேண்டுமென்ற பொறுப்புணர்வுடனோ இந்தியாவால் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதனை இலங்கை அரசும் தமிழ்மக்களும் இணைந்து நிராகரிக்கும் அவலம் ஏற்பட்டிருக்காது.

சிங்கள மக்களும், தமிழ்மக்களும் சேர்ந்து இந்தியப் படையை வெளியேபோவென்று சொல்லவேண்டிய துயரமும் ஏற்பட்டிருக்காது.

இந்திய - இலங்கை உடன்படிக்கையையும் இந்தியப் படையின் பிரசன்னத்தையும் ஜே.வி.பியினர் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் உட்பட ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான அனைத்துச் சக்திகளும் எதிர்த்தபோதே அது இலங்கையின் நலனைக் கருத்திற்கொண்ட ஒன்றல்ல என்பது தெளிவாகிவிட்டது. தமிழ்மக்களின் எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் அந்த ஒப்பந்தம் முற்றாகவே புறந்தள்ளிவிட்டு, இந்திய நலனை மட்டுமே கருத்திற்கொண்டு அமைக்கப்பட்டது என்பதும் உண்மையே...

இந்தியப் படையால் மிருகத்தனமான முறையில் பாதிப்புகளுக்கும், அழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்ட தமிழ்மக்கள், அவர்களை எதிர்த்துப் போராடவேண்டியேற்பட்டது தவிர்க்க முடியாத வரலாற்று நிகழ்வாகவும் ஆனது.

இந்திய - இலங்கை உடன்பாட்டின் தோல்வி, இந்திய அரசை தமிழ்மக்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தை எதிர்க்கும், தமிழ்த்தேசியத்தை நிராகரித்து பேரினவாத சக்திகளுக்குத் துணைபோகும் கொள்கைகளை உருவாக்கும் தொலைநோக்கு சிந்தனையற்ற வகையில் உருவாக்க வழிகோலியது துரதிர்ஷ்டவசமான சம்பவமேயாகும்.

1990 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இந்தியப்படை வெளியேறியதன் பின்னர், நடந்த இலங்கையின் உள்நாட்டுப் போரில், சிங்களப் பேரினவாத அரசின் இன அழிப்பு இராணுவ நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு இராணுவ மற்றும் ஆயுத தளபாட ரீதியில் அளித்த ஒத்துழைப்புக்கூட இலங்கையின் நலனுக்காகவே என்று இந்தியா கூறுமேயானால் - அது தமிழர்களின் நலன்களை அழிக்கவேயென்ற அர்த்தத்தையும் கொடுக்கவே செய்யும்.


சமாதான காலத்திலும் அமைதி முயற்சிகளுக்கு இந்தியா வெளிப்படையாக ஆதரவு தெரிவிப்பதாகக் கூறினாலும்கூட ஒதுங்கி நின்று அதற்கு எதிரான சக்திகளுக்கு ஆதரவு வழங்கியதையும் அனைவரும் அறிவர்.

இந்த நிலையில் தமிழ்மக்களுக்காகவும், தமிழ்மொழிக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் குரல்கொடுக்கும் கடமைப் பொறுப்பினை கொண்ட தமிழ்ப் பத்திரிகைகளுக்கு இந்தியாவைப் பகைக்கும் அல்லது அவமதிக்கும் நோக்குடன் எதனையும் எழுதவேண்டிய, விமர்சிக்கவேண்டிய அவசியமே கிடையாது. அது தமிழ்மக்களின் நலனுக்கு உகந்ததுமல்ல.

ஆனாலும், உண்மையை எழுதவேண்டிய பொறுப்பு தமிழ்ப் பத்திரிகைகளுக்கு மிக அதிகமே உண்டு என்பதை தமிழ்ப் பத்திரிகையாளர் உணர்ந்தேயுள்ளனர்.

உண்மை சுடத்தான் செய்யும்... அதற்கு என்ன செய்வது?

# நாடும் நடப்பும்




# ஊடகவியலாளர் சிவராமின் இல்லம் சோதனை; உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடிவு!

## இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர்

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராமின் இல்லத்தில், கடந்த 3 ஆம் திகதி இரவு பொலிஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கை தொடர்பாக இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனிதஉரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்யவுள்ளது என ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்தார்.

இந்தநிலையில், நீதிமன்றத்தின் ஆணை பெறப்படாமல் சிவராமின் இல்லத்தில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில் -

நீதிமன்ற ஆணை பெறப்பட்டே தேடுதல் நடத்தப்பட்டதாகக் கூறினார்.

# முன்னோடி கல்வி வலயங்களாக நான்கு வலயங்கள் தெரிவாகின!

(ஆழியவளை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயங்களில் முன்னோடி கல்வி வலயங்களாக நான்கு கல்வி வலயங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் வடமாகாணத்தில் வவுனியா தெற்கு, மன்னார் ஆகியனவும், கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, சம்பாந்துறை ஆகிய கல்வி வலயங்களும் தெரிவாகியுள்ளன.

கல்வி, மனிதவள, கலாசார பண்பாட்டு அமைச்சினால் பொதுக் கல்வி சீர்திருத்தத்துக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பாடசாலை மீள் கட்டமைப்பின் கீழ் இந்த நான்கு முன்னோடி கல்வி வலயங்களிலும் புதிய பாடசாலைகள் அமைத்தல், பாடசாலைகளைத் தரம் உயர்த்தல், பாடசாலைகளுக்கு ஆளணி மற்றும் பௌதிக வளங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் - அவற்றை அதிகரித்தல் ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.(122)

# நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் முன்வரவேண்டும்!

## கிளிநொச்சி அரச அதிபர் வேண்டுகோள்

(ஆழியவளை)

நிவாரணக் கொடுப்பனவுக்காக அரிசியை வழங்குவதற்கு ஏதுவாக விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் முன்வரவேண்டுமென கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வருடம் டிசெம்பர் மாதம் வரையிலான நிவாரணக் கொடுப்பனவிற்கான அரிசியை வழங்குவதற்கு ஏதுவாகக் கூட்டுறவுச் சங்கங்கள் - விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (122)

# குடாநாட்டு விவசாய அபிவிருத்தி; அரச அதிகாரிகள் ஆராய்ந்தனர்!

யாழ்.குடாநாட்டின் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான கூட்டமொன்று கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்ட கமநலசேவை திணைக்களத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி விவசாய நடவடிக்கைகளை விருத்திசெய்யும் நோக்குடன் அரசசார்பற்ற நிறுவனங்கள் பல உதவிபுரிய முன்வந்துள்ளதை அடுத்தே இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட கமநலசேவை திணைக்களத்தின் ஆணையாளர் எஸ்.சுந்தரேசன், யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ்.மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுத் தலைவர் கலாநிதி கே.குணராசா மற்றும் யாழ்.மாவட்டத்தின் உதவி அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் - பருவகாலத்திற்கேற்ப பயிர்களைத் தெரிவுசெய்து விவசாயிகள் பயன்பெற நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. (ப)

# மிதிவெடி அகற்றிய காணிகளை கையளிக்கும் நிகழ்வை பிற்போடுக!

## உரிமையாளர்கள் கோரிக்கை

(வண்ணை)

வண்ணார்பண்ணை, கலட்டி, சீனியர்லேன், தட்டாதெரு ஆகிய பகுதிகளில் ஹலோட்ரஸ்ட் நிறுவனத்தினரால் மிதிவெடி அகற்றிய பிரதேசங்களை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வைத் தற்போது நடத்தவேண்டாமென அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

ஹலோட்ரஸ்ட் நிறுவனத்தினரால் மிதிவெடி அகற்றும்போது அப்பகுதிகளிலிருந்த மண்ணும் அகழ்ந்தெடுக்கப்பட்டது.

தற்போது அந்தப் பிரதேசங்கள் பள்ளமாகக் காட்சியளிக்கின்றது. எனவே அகழ்ந்தெடுக்கப்பட்ட மண்ணை மீளக் கொண்டுவந்து கொட்டிய பின்னரே மிதிவெடி அகற்றிய பிரதேசங்களை கையளிக்கும் நிகழ்வை நடத்தும்படி அப்பகுதி மக்கள் மகஜர்கள் மூலம் - யாழ்.மாவட்ட செயலக மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தைக் கோரியுள்ளனர். (111)

# மனித உரிமை தொடர்பான பயிற்சிப் பட்டறை 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெறும்!

(யாழ்ப்பாணம்)

யுத்த நடவடிக்கைகளால் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கும், யுத்த நடவடிக்கைகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த பயிற்சிப் பட்டறைகளை இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு நடத்தவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் முகாம் பகுதிகளில் இருந்தும், யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளூடாகவே, மனிதஉரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

இளம் சமூகத்தைச் சேர்ந்த 100 பேர் கொண்ட இப்பிரதிநிதிகளுக்கு, இரு குழுக்களாக பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி 50 பே்ரை உள்ளடக்கிய ஒரு குழுவுக்கும், 13 ஆம் திகதி மிகுதி 50 பேரை உள்ளடக்கிய குழுவுக்கும் இந்த மனிதஉரிமைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படவுள்ளது.


பயிற்றப்பட்ட இந்தக் குழுவினர் இடம்பெயர்ந்த முகாம்கள் மற்றும் யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களிடையே மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவர் என மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004


## இரசாயனவியல் I

A.லோகநாதன் Dip. in.Ed மாதிரி வினாத்தாள்

(27) குறிப்பிட்ட ஓர் பல்பகுதிய சேர்வையின் அமைப்பலகு



ஆகும். எனின், இதன் ஆக்கக்கூசுகளாக அமைவன எவை?



(28) பின்வருவனவற்றின் மூல இயல்பை ஏறுவரிசைப்படுத்தும் சரியான ஒழுங்கு எது?

$A=CH_3CH_2CONH_2$  $B=CH_3NH$,  $C=(CH_3)_2-NH$  $D=C_6H_5-NH_2$

1) D < A < B < C  2) B < C < A < D  3) A < D < C < B
4) A < D <B<C  5.B<C<D<A

(29) $CH_3CH_2-OH \longrightarrow CH_3-CH_2-NH_2$; $CH_3CH_2-OH \xrightarrow{A} CH_3CH_2-CL \xrightarrow{B} \boxed{X} \xrightarrow{Y} CH_3-CH_2-NH_2$

இங்கே A>\b>Y இற்கு பொருத்தமான தாக்கு பொருட்களும், X ன் கட்டமைப்பும் முறையே

1) HCl, CUCN, $NH_3/\nabla$, $CH_3CH_2CL$
2) $PCL_5$ ∇ 4, CUCN/HL, NH 3/∇, $CH_3CH_2CN$.
3) $PCL_5$ ∇, அற் KCN, $CH_3CH_2CN$, Na/Et-OH.
4) அற் KOH, $PCL_5$ ∇, $CH_3CH_2CN$, Na/Et-OH
5) $PCL_5$ ∇, அற் KCN, Na/ Et- OH, $CH_3CH_2CN$.

(30) பென்சீன் வளையத்தைக் கொண்டுள்ளதும், C,H,O என்பவற்றை மிகவும் இழிவு எண்ணிக்கையில் வைத்திருப்பதுமான சேதனச் சேர்வை ஒன்றிற்கு எழுதக்கூடிய கட்டமைப்புக்களில் மூன்று கட்டமைப்புக்கள் NaOH(aq) ல் கரைந்தன. இன்னொரு கட்டமைப்பு NaOH (aq) ல் கரையவில்லை. ஆனால் Na உடன் தாக்கம் புரிந்தது. வேறு ஒரு கட்டமைப்பு NaOH ல் கரையவுமில்லை, Na உடன் தாக்கம் புரியவுமில்லை. எனவே, இவற்றைத் திருப்தி செய்யக்கூடிய மூலக்கூற்றுச் சூத்திரமாக அமையக் கூடியது?

1. $C_6H_6O$  2. $C_7H_6O_2$  3. $C_7H_8O_2$  4. $C_9H_{10}O_2$  5. $C_7H_8O$

31⟶40 வரையில் a,b சரி எனின் -① b,c -② c,d -③ a,d -④ வேறு ⑤ என்ற ஒழுங்கு முறையை பின்பற்றுக.

(31) 300k வெப்பநிலையிலும், $1X10^5NM^{-2}$ அமுக்கத்திலும் பி.வ. எவற்றின் அடர்த்திகள் ஏறத்தாள சமனாக இருக்கும்.

a, $C_2H_{4(g)}$  b, $H_2se_{(g)}$  c, $C_2D_{2(g)}$  d, $^{14}CD_{4(g)}$

(32) ஆய்வுகூடத்தில் $O2_{(g)}$ ன் மூலர்க்கனவளவு துணிவதற்கு எடுக்கப்பட வேண்டிய அளவீடுகள் பின்வருவனவற்றுள் எது/எவை?

a, வாயுவின் திணிவு  b, வாயுவின் வெப்பநிலை
c, வாயுவின் கனவளவு  d, வாயுவின் மூ. கூ. திணிவு.

(33) தூய நீரின் $500Cm^3$ ற்கு HCOOH ன் 1mol சேர்க்கப்பட்டது. பி. வ. எது/எவை உண்மையானது / உண்மையானவை?

a, கரைசலின் $[H^+] > [OH^-]$  b, கரைசலின் $P^H > 7$
c, கரைசலின் $[H^+]$ அண்ணளவாக 2 mrl $dm^{-3}$
d, நீர்க்கரைசலில் HCOOH பூரணமாக கூட்டற்பிரிகை அடையாது.

(34) பின்வருவனவற்றுள் பச்சைவீட்டுவிளைவுடன் தொடர்புள்ள வாயுக்கள்

a, $CO_2$  b, $NO_2$  c, NO  d, $N_2$

(35) எதனோல், நீர் கொண்ட கரைசலொன்றில் எதனோலின் மூலப்பின்னம் 0.60 ஆகும். இங்கே

a, கரைசலில் எதனோலின் நிறைச்சதவீதம் 0.35%
b, கரைசலில் முழுமையாக O ன் திணிவு 160gr
c, கரைசலில் முழுமையாக H ன் திணிவு 24gr
d, கரைசலில் C ன் திணிவுச் சதவீதம் 20 %

(36) பின்வரும் கூற்றுக்களில் சரியானது/சரியானவை எது/எவை?

a, கரைசலின் $p^H$ மறைப் பெறுமானத்தை எடுக்கமுடியும்.
b, $p^H$ என்பது $[H^+]$ மட்டும் தங்கியுள்ளது.
c, நடுநிலைக் கரைசல் ஒன்றின் $p^H$, 7 இலும் குறைவாக இருக்கமுடியும்.
d, ஒரு கரைசலின் $p^H$ மறை (-) பெறுமானத்தை எடுக்கமுடியாது.

(37) $LiAIH_4$ இனால் தாழ்த்தப்படக்கூடியது/கூடியவை எது/எவை?

a, CH≡CH  b, $CH_3CHO$  c, $CH_3CONH_2$  d, $CH^2=CH_2$

(38) பின்வரும் தொடர்புகளில் தவறல்லாதவை எவை?

$N2(g) + 3H_2(g) \rightleftharpoons 2NH_3(g)$ என்னும் சமநிலைத்தாக்கத்தில்

a, $Kp=Kc\ RT^{-2}$  b, $Kc=Kp(RT)^{-2}$  c, $Kc=Kp(RT)^2$  d, $Kp=Kc(RT)^{-2}$

(39) பின்வரும் கூற்றுக்களில் சரியானது/சரியானது எது/எவை?

இது $Mg_{(s)} / Mg^{2+}$ ($1moldm^{-3}$) // $CU^{2+}$ $1moldm^{-3}$ / Cu(s) கலம் தொடர்பானது.

a, Mg மின்வாய் கதோட்டாகும்.  b, Mg ல் ஒட்சியேற்றம் நடைபெறும்.
c, Mg மின்வாயிலிருந்து Cu மின்வாயிற்கு புறச்சுற்றில் மின்னோட்டம் செல்லும்.
d, Cu மின்வாயில் தாழ்த்தல் நடைபெறும்.

(40) $CU\ SO_4(aq)$, ஐ Cu மின்வாய் கொண்டு மின்பகுக்கும் போது பின்வருவனவற்றில் சரியானது/ சரியானவை எது/ எவை?

a, கரைசலின் நீல நிறம் குறையும்.  b, கதோட்டில் Cu படியும்.
c, $P^H$ மாற்றமடையும்.  d, ஆனோட்டில் Cu படியும்.

(41) பின்வருவனவற்றுள் எந்த அமோனியம் உப்பைச் சூடாக்கும் போது $N_2$ வாயு கிடைக்கும்.

1. $(NH_4)_2CO_3$  2. $NH_4NO_2$  3. $NH_4NO_3$  4. $CU(NH_3)_4Cl_2$


(42) $[CU\ Cl_4]^{2-}$ என்பனவற்றின் நிறங்கள் முறையே

1. நீலம், மஞ்சள்  2. மஞ்சள், பச்சை  3. நீலம், பச்சை
4. பச்சை, இளம்சிவப்பு  5. மஞ்சள், நீலம்.

(43) பின்வருவனவற்றுள் சரியான தொடர் எது?

1. $Sncl_2$, $pbcl_2$, $Becl_2$ யாவும் அயன் பிணைப்புடையவை.
2. Mgo, $Al_2O_3$, CO யாவும் மூல ஒட்சைட்டுக்களாகும்.
3. $N_2O$, $No_2$, No யாவும் அமில ஒட்சைட்டுக்களாகும்.
4. Cds, $As_2$, $s_3$ Nis யாவும் மஞ்சள் நிறம்.
5. $MnO_2$, $Al_2O_3$ Beo யாவும் ஈரியல்புடையவையாகும்.

44) தரப்பட்ட ஐதரோகாபன் சேர்வை ஒன்று கேத்திரகணித, ஒளியியல் சமபகுதியங்களைக் காட்டுகின்றது. பின்வருவனவற்றுள் அது எது?




(45) $CH_3COOH$ (aq) இற்கும், NaOH (aq) இற்கும் (இரண்டும் 0.5 $moldm^{-3}$) இடையிலான நடு நிலையாக்களின்போது பாவிக்கக்கூடிய சிறந்தகாட்டி எது?

| 1, A | 2, B | 3, C | 4, D | 5, E | காட்டி |
|---|---|---|---|---|---|
| 3.0-5.0 | 3.0-4.0 | 2.9-4.6 | 8.3-10.10 | 9.3-11.0 | $P^H$வீச்சு |

46) தரப்பட்ட அசேதன உப்பு ஒன்று வெண்ணிறமுடையது. இதை வெப்பப்படுத்தியபோது கபில நிறவாயுவும், O2 (g)யும் பெறப்பட்டன. இதன் கரைசல் செறி HCl உடன் வீழ்படிவைத் தரவில்லை. எனினும், ஐ $H_2SO_4$ சேர்க்க வெண்ணிற↓பெறப்பட்டது. எனவே, அந்த ஆரம்ப உப்பும், இறுதி வீழ்படிவும் முறையே.

1) Nacl ம், $Na_2SO_4$ ம்
2) $Zn(NO_3)_2$ ம், Zn Sம்
3) Pb $(NO_3)_2$ ம், PbSம்
4) $Pb(NO_3)_2$ ம், $PbSO_4$ ம்
5) $Ca(NO_3)_2$ ம், $CaCO_3$ம் ஆகும்

(47) 3-bcomo - 4 - fotmyl - 2 pentenoy chloride ன் கட்டமைப்பு எது?




5) இவை எவையுமல்ல

(48) தரப்பட்ட சேதனச் சேர்வை ஆ தொலனின் சோதனைப் பொருளுடன் வெள்ளியாடியைத் தரவிலையாயினும், பிராடியின் சோதனைப் பொருளுடன் செம்மஞ்சள் நிற↓ தந்தது. அத்துடன் M, $Na_2CO_3$ (aq) உடன் வாயுக்குமிழிகளையும் உண்டாக்கி, NaOH (aq) உடன் கரையக்கூடியதாகவும் காணப்பட்டிருந்தது. எனவே M யாது?



3) OHC - $CH_2$ - CH(OH) - $CH_2COOH$

4)



5) $CH_3$- CO - $CH_2$ - $CH_2$ - COOH

49) $H-{}^aC={}^bC-{}^xCH_3$ தொடர்பாக

1) 4 σ பிணைப்புக்கள் உண்டு 2) a,b,c கள் $Sp^2$ கலப்புடையவை பிணைப்புக்கள் உண்டு.
3) Λ பிணைப்புக்கள் உண்டு 4) 8 பங்கீட்டுப் பிணைப்புக்கள் உண்டு
5) x காபன் SP கலப்புடையது.

50) பின்வருவனவற்றில் நெல்சனின் நுண்துளைக்கலத்தில் NaOH தயாரிப்பின் பிரதான மூலப்பொருளும், பக்க விளைவுகளும் முறையே

1) $NH_4OH$, $H_2$, $Cl_2$  2) NACl, $H_2$, $Cl_2$  3) $NH_3$,H2, $Cl_2$
4) $NA_2co_3$, NACl  5) Naocl, $cl_2$, $H_2$

51 - 60 வரையானவற்றுக்கு 1 ஆம் கூற்று, II ஆம் கூற்று தெரிவுகள்

| I ம் கூற்று | II ம் கூற்று |
|---|---|
| 51) சாறெண்ணை பிரித்தெடுத்தலில் கொதிநிராவி காய்ச்சிவடித்தல் பயன்படுகிறது. | இம்முறையில் சாரெண்ணையின் கொதிநிலை குறைக்கப்படுகின்றது. |
| 52) வெப்பநிலை அதிகரிக்கப்படும்போது வாயு மூலக்கூறுகளின் தாக்கவீதம் அதிகரிக்கும். | வெ. நிலை அதிகரிக்க ஏவற்சக்தியினும் கூடிய சக்தியைப் பெற்ற மூலக்கூறுகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. |
| 53) கார ஊடகத்தில் $Mn^{2+}$ உள்ள கரைசலின் ஊடாக $H_2S(g)$ செலுத்த MnS↓தோன்றாது | Mns ன் கரைதிறன் பெருக்கம் CuS ன் கரைதிறன் பெருக்கத்தைவிட உயர்வாகும். |
| 54) பென்சீனின் நைத்திரேற்றைவிட தொலூயினின் நைத்திரேற்றம் இலகுவானதல்ல. | $-CH_3$ கூட்டம் $e^n$ கவரும் கூட்டம் ஆகும். |
| 55) αதுணிக்கையை He அணுவுடன் ஒப்பிடலாம். | இரண்டிலும் ஒரே எண்ணிக்கையான புரோத்தன்கள் உள்ளன. |
| 56) $25^0C$ ல் நடுநிலைக் கரைசல் ஒன்றின் $P^H=7$ ஆகும். | $25^0$ Cல் தூய நீதின் Kw பெறுமானம் $1x10^{-14}$ $moldm^{-3}$ ஆகும். |
| 57) $CH_3COO$ Na ன் நீர்க்கரைசல் நீலப் பாசிச் சாயத்தாளை சிவப்பு நிறமாக்கும். | $CH_3COONa$ முற்றாக கரையக்கூடியது. (நீரில்) |
| 58) HCOOH தொலனின் சோதனைப் பொருளுடன் வெள்ளி ஆடியைத்தரும். | HCOOH ல் -C(=O)-OH கூட்டம் உண்டு. |
| 59) $Pcl_3$ ஐயும், $Bicl_3$ ஐயும் வேறுபடுத்த நீரைப் பயன்படுத்தலாம். | $Bicl_3$, நீருடன் வெண்நிற ↓தரும் |
| 60) $NH_3$ ஐ விட $CH_3NH_2$ ன் மூல இயல்பு உயர்வானது | $NH_3(g)$ ல் H பிணைப்பு உண்டு. |

# பஸ்ராவிலுள்ள பிரிட்டன் படையினர்மீது சதார் ஆதரவு கிளர்ச்சியாளர் தாக்குதல்

ஈராக்கிலுள்ள இஸ்லாமிய கிளர்சிக்குழுவின் தலைவரான சதாரின் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் பஸ்ராவிலுள்ள பிரிட்டன் படையினர்மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பஸ்ராவின் நகரத்தில் பிரிட்டன் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், பஸ்ராவிலுள்ள ஆணையாளர் கட்டடத்தை இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் தாக்கமுற்பட்ட வேளை அதனை பிரிட்டன் படையினர் திருப்பித் தாக்கி முறியடித்தனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பஸ்ராவிலுள்ள பிரிட்டன் இராணுவ வட்டாரங்களின் தகவலின்படி இந்தச் சம்பவத்தில் இரு ஈராக்கியர்கள் கொலலப்பட்டதாகவும் கூடுப்படையைச் சேர்ந்த ஒரு படைவீரர் காயமடைந்ததாகவும், நிலமை இன்னமும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவில்லையெனவும் தெரிவித்தது.

வைத்தியசாலை ஒன்றின் தகவலின்படி பல ஈராக்கியப் பெதுமக்கள் இந்தச் சம்பவத்தில் காயமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்தக் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கு எதிராக பிரிட்டன் படையினர் தகுந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக லண்டனிலுள்ள பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பஸ்ராவிலுள்ள சதாரின் தலைமை அலுவலகத்தை சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட வாகனங்கள் மூலம் பிரிட்டன் படையினர் சுற்றி வளைத்துள்ளதாகவும் இங்கு பெருமளவான சதாரின் ஆதரவுப் படையினர் உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



நஜாப்பிற்கு அருகிலுள்ள குபா எனனும் நகரில் சதார் உரையாற்றிய மறுநாள் இந்த வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாக கூறப்படுகின்றது.

ஈரக்கிலுள்ள பிரிட்டன் படையினர் எவரையாவது கொல்பவருக்கு அல்லது பிடித்து தருபவருக்கு தாம் பரிசு வழங்கவுள்ளதாக பஸ்ராவிலுள்ள சதார் ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# சூடான் பிரச்சினைகளுக்கு ஐ.நா. நடவடிக்கை எடுக்காது!

சூடான் டாபூர் பிரதேசத்திலுள்ள மக்களின் மனிதநேய பிரச்சினைகளுக்கு உடன் நடவடிக்கை எதையும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை மேற்கொள்ளாது என பாதுகாப்புச் சபை அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.



தொடர்ந்தும் அப் பிரதேசத்தில் வாழும் மக்களின் மனிதநேய பிரச்சினைகளை அவதானித்து வருவதாகவும் பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது. சூடானிய அரசு அப்பிரதேசத்திலுள்ள போராளிக் குழுக்களுக்கெதிராகவே போராடி வருகின்றதென தெரிவித்துள்ளது.


ஆனால், ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் பேர்நாட் ராமசரன், வான் தாக்குதல்களை சூடானிய அரசே மேற்கொண்டுவருகின்றதெனவும், இவற்றை தாம் நேரில் அவதானித்ததாகவும் தெரிவித்தார். அத்துடன், அமெரிக்கா, பிரிட்டன் நாடுகள் சூடான் அரசிற்கு சார்பான குழுக்களை கட்டுப்படுத்தி மககளைப் பாதுகாக்க வேண்டுமென தெரிவித்திருந்தன. அத்துடன் டார்பூரில் நடைபெற்றுவரும் மனிதநேய பிரச்சினைகள் தாம் அவதானித்துவருவதாகவும், தெரிவித்துள்ளன.

இக் கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவித்த சூடானிய வெளிநாட்டு அமைச்சர் முஸ்தபா ஸ்மெயில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வருவதற்கான சாத்தியங்கள் காணப்பட்ட வேளையிலும், இன அழிப்பு நடைபெறவில்லை எனத் தெரிவித்தார்.

## ஈராக் கைதிகள் துன்புறுத்தல்

# ரம்ஸ் பீல்ட் மீதான விசாரணை அமெரிக்க காங்கிரஸில் நடைபெற்றது

ஈராக்கில் சிறைக்கைதிகள் அமெரிக்கப் படையினரால் துன்புறுத்தப்பட்டது தொடர்பாக, அமெரிக்க காங்கிரசினால் விசாரணைகள் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஷ் பீல்டின் மீது மேற்கொள்ளப்பட்டது. இவ் விசாரணைகள் 6 மணித்தியாலங்களாக நடத்தப்பட்டுள்ளது. ஜனநாயகக் கட்சியின் அங்கத்தவர்கள் 'ரம்ஷ் பீல்ட்' பதவியிலிருந்து வெளியேற்றப்படவேண்டும் என கருத்து தெரிவித்து



வரும் வேளையில், ஜனாதிபதி புஷ் உட்பட குடியரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பாதுகாப்பு செயலர் பதவியில் ரம்ஸ்பீல்ட் தொடர்ந்து இருக்க வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

ரம்ஷ் பீல்ட் ஈராக்கின் கைதிகள் அமெரிக்கப் படையினரால் துன்புறுத்தப்பட்டதற்கு மன்னிப்புக் கோரியுள்ளார். ஈராக்கின் கைதிகள் அமெரிக்கப்படையின் கண்காணிப்பில் சிறைவைக்கப்பட்டுள்ளதால் அவர்களை நன்கு பராமரிப்பது அமெரிக்கப் படையின் கடமையெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, நீண்டகால அநுபவமிக்க செட்சர் எட்வாட் கெனடி ரம்ஸ் பீல்ட் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் எனவும், புதிய பாதுகாப்புச் செயலர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். இதற்குப் பதிலளித்த ரம்ஷ் பீல்ட் செனட்டின் இரு சபைகளும் தனது பணி தேவையில்லை என கருதும் நிலையில், ஒரு நிமிடத்தில் வெளியேறுவதற்குத் தயாராக உள்ளதாக தெரிவித்தார். அத்துடன் இப்பிரச்சினையை ஒரு அரசியல் பிரச்சினையாக மாற்ற முயல்வதாகவும் தெரிவித்துள்ளார்.



## அமெரிக்காவும் - அவுஸ்ரேலியாவும்

# ஆயுதம் தரித்த படையினரை விமான சேவையில் ஈடுபடுத்தமுடிவு

அவுஸ்ரேலியாவும், அமெரிக்காவும் தமது விமானங்களில் ஆயுதம் தரித்த படையினரை பாதுகாப்பிற்கு அமர்த்தத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாடுகளுக்குமிடையே செய்யப்படவுள்ள புதிய உடன்படிக்கை இரு நாட்டின் தேசிய விமான சேவையிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த உடன்படிக்கையால் தற்போதைய சர்வதேச வான்படைத்துறை அதிகாரிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு நாட்டுக்கான வான்சேவையின் பாதுகாப்பைக் கருதியே இந்த உடன்படிக்கை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படும் அதேவேளை, இது தொடர்பான மேலதிக விபரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

விமானத்தின் பயணிகளின் அளவைக் கொண்டே அதில் செல்லும் பாதுகாப்பு அதிகாரிகளின் தொகையும் இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வகையான அதிகாரிகள் கடந்த டிசம்பர் மாதத்தில் அவுஸ்ரேலியாவிற்கும், சிங்கப்பூருக்கும் இடையிலான விமான சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



அவுஸ்ரேலிய அரசு ஆயுதம் தாங்கிய அதிகாரிகளை விமான சேவையில் ஈடுபடுத்த வேண்டுமென பிரிட்டன்,மலேசியா, கனடா போன்ற பல நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, சில சட்டப்பிரச்சினைகளும் எழவுள்ளது. எப்போது அதிகாரிகளைப் பயன்படுத்துவது, அவர்கள் எப்படியான ஆயுதங்களைப் பயன்படுத்துவது, அவர்கள் எப்படியான ஆயுதங்களைக் கையாள வேணடும், அவர்கள் எப்போது வெளியேற்றப்படவேண்டும் என்பன தொடர்பாக இராஜதந்திரிகள் ஆராயவுள்ளனர்.

அவுஸ்ரேலிய அரசு மேற்படி சேவைக்கான செலவுகளை குலன்ராஸ் விமான சேவையுடன் பகிர்ந்து கொள்வதாக கூறியுள்ளது. அத்தோடு இச்செலவுகள் பயணிகளிடமிருந்து அறவிடப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.




# ஜோர்ஜிய ஜனாதிபதி சக்காஸ்விலி அஜாரிய நாடாளுமன்றைக் கலைத்தார்

ஜோர்ஜிய ஜனாதிபதி மிக்காலி சக்காஸ்விலி அஜாரிய நாடாளுமன்றை கலைத்து ஆட்சியை தனது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். அஜாரிய அரசாங்கம் ஒரு தன்னாட்சியான அரசாங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

சக்காஸ்விலி அஜாரியாவின் அதிகாரசபையைக் கலைத்து மாகாண சபை ஒன்றை உருவாக்கவுள்ளார். இந்த மாகாணசபை பொதுத்தேர்தல் வருமவரை ஆளும்.



அடுத்த மாதம் அஜாரியாவில் தேர்தல் நடைபெறவுள்ளது. பி.பி.சி செய்தியாளர் செலா ஆர்னல்ட் தெரிவிக்கையில், அஜாரியாவில் தேர்தல் என்பது ஒரு அமைச்சரவையை தேர்ந்தெடுப்பது எனவும், இந்த அமைச்சரவை - கருங்கடல் எல்லைப் பிரதேசத்தை உருவாக்கும் எனத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த அமைச்சரவை ஜோர்ஜியாவில் உள்ள மத்திய அரசுக்கு தனது முடிவை அறிவிக்கும் எனவும் தெரிவித்தார்.

# இந்தியப் போர்விமானம் விழுந்து நொருங்கியது



(அம்பாலா)

ஹரியான மாநிலம் அம்பாலாவில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை இந்திய விமானப்படைக்குச் சொந்தமான 'ஜாகுவார்' விமானம் புறப்பட்டுச் சிறிது நேரத்தில் வயல் வெளியில் விழுந்து நொருங்கியது. என்றாலும் விமா னத்தை ஓட்டிச்சென்ற விமானிகள் பரசூட்மூலம் குதித்து உயிர்தப்பினார்கள்.

விமானம் விபத்துக்குளான இடத்தில் ஏதேனும் சேதம் ஏற்பட்டதா என்ற விபரம் உடனடியாகத் தெரியவில்லை.

## வீரப்பன் காட்டிலுள்ள

# வாக்குச் சாவடிகளுக்கு அதிரடிப்படை பாதுகாப்பு!

வீரப்பனின் நடமாட்டம் உள்ள காட்டுப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடிகளுக்கு அதிரடிப்படை பாதுகாப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

வீரப்பனின் நடமாட்டம் அதிகம் உள்ள காட்டுப்பகுதிக் கிராமங்களில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு சிறப்பு அதிரடிப்படைப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது. கோவிந்தபாடி, கோட்டையூர், கத்திரப்பட்டி ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள 14 வாக்குச் சாவடிகளையும் அதிரடிப்படையினர் தமது பாதுகாப்பின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் உள்ள அனைவரும் வீரப்பனுக்கு நெருங்கியவர்கள். அவனுக்குச் சொந்தக்காரர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. வாக்குப் பதிவு முடியும்வரை இந்த அதிரடிப் படைப் பாதுகாப்புத் தொடரும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஐ.தே.கவில் மாற்றங்கள் இன்று அறிவிக்கப்படும்!

ஐக்கிய தேசியக் கட்சியில் செய்யப்படவுள்ள புதிய நியமனங்கள் தொடர்பாக இன்று அறிவிக்கப்படவுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி, கட்சியின் புதிய தலைவர், செயலாளர் மற்றும் தேசிய அமைப்பாளர் போன்றவர்களின் விபரங்கள் இன்று அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நடந்து முடிந்த நாடளுமன்ற தேர்தலின் பின் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மீள் புனரமைப்பு நடவடிக்கையிலேயே இந்த புதிய நியமனங்கள் தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பல வீனங்களை அறிந்து கட்சியினை மீள புனரமைக்க வேண்டுமெனவும், அத்துடன் கட்சிக்கு செயற்பாடுமிக்கவர்களை பதவிகளில் நியமிக்க வேண்டும் எனவும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் நடந்த கட்சிக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை வலியுறுத்தி கேட்டிருந்தனர்.

இதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிகளில் மாற்றம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு, ஐக்கியத்திற்கு பாதிப்பு ஏற்படாமல் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படும்!

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறிக்கை

நாட்டின் பாதுகாப்பு, சுதந்திரம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை இரண்டாம் இடத்திற்குத் தள்ளாமல் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றிலேயே இவ்வாறு, தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சகல சமூகங்களினதும், அபிலாஷைகளும், ஜனநாயகமும், சகல பிரஜைகளினது மனித உரிமைகளும் பேணிக் காக்கவேண்டிய அவசியம் கவனத்தில் எடுக்கப்படும்.

விடுதலைப் புலிகள் முன்னைய அரசாங்கத்தோடு நடத்திய பேச்சுவார்த்தைகளில் இடம்பெற்ற குறைபாடுகளும் கவனத்தில் எடுக்கப்படும். ஐக்கிய இலங்கைக்குள் சகல சமூகங்களும் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும், வாழக்கூடிய சூழ்நிலை ஒன்றை உருவாக்க அரசாங்கம் முயற்சிசெய்து வருகிறது.

விடுதலைப் புலிகளுடனும், சம்பந்தப்பட்ட ஏனைய சகல குழுக்கள், சமூகங்கள் ஆகியவற்றுடனும் சரியான அடிப்படையில் அரசியல் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

பிரச்சினைகளில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரோடும் ஆலோசனை மேற்கொண்டு இனப்பிரச்சினைக்கான விரிவான தீர்வு ஒன்று காணப்படும் என்று அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனைத்துக் கட்சித் தலைவர்கள் பதினேழாம் திகதி கூடவுள்ளனர்!

(கொழும்பு)

அனைத்துக் கட்சித் தலைவர்களின் குழுக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கட்சித் தலைவர்களின் குழுக் கூட்டத்தில் பல முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

அடுத்த நாள் நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் பிரதி சபாநாயகர் தெரிவு தொடர்பாகவும், இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும், மேர்வின் சில்வாவும் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளனர்.

இவர்கள் இருவரும் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப் படுவதற்காக, ஏற்கனவே தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவிருந்த இருவர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்ததும் குறிப்பிடத் தக்கது.

# ஹாட்லியில் தீ விபத்து கணினிகள் எரிந்து நாசம்!

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கணினி அறையில் ஏற்பட்ட தீ விபத்தினால், சுமார் 3.5 மில்லியன் ரூபா பெறுமதியான கணினிகள் எரிந்து நாசமாகியுள்ளதாக கூறப்படுகின்றது.

கணினி அறையினுள் சுமார் 28 இற்கும் அதிகமான கணினிகளும் மூன்று குளிரூட்டிகளும், இவற்றுடன் இணைப்பு சாதனங்களும் பொருத்தப்பட்டிருந்தன.

தற்போது இடம் பெற்றுவரும் உயர்தர வகுப்பு பரீட்சைக்காக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இந்த நிலையில் சில தினங்களாக கணினி அறையும் மூடப்பட்டிருந்தது.

ஆசிரியர் ஒருவர் கணினி அறையைத் திறந்து பார்த்தபோது புகை மண்டலமாகக் காணப்பட்டது.

தீ விபத்தில் நாசமாகிய கணினிகளில் பெரும்பாலானவை கல்வித் திணைக்களத்தினாலும், பாடசாலையின் பழைய மாணவர்களாலும் வழங்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மின் ஒழுக்கினால் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. (202, 13)

# மூவாயிரம் ஈழ அகதிகள் தாயகம் திரும்ப விருப்பம்!

## உதவித் தூதுவர் தகவல்

(கொழும்பு)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கை தமிழர்களில் மூவாயிரம் பேர் மீண்டும் நாடு திரும்ப விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

இந்த தவலை இந்தியாவுக்கான இலங்கையின் உதவி ஸ்தானிகர் சுமித் நாகன்பல வெளியிட்டார்.

இந்தியாவில் தற்சமயம் 150 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர். இவர்களில் வன்னி, யாழ்ப்பாணம், மலையகத் தமிழர்களும், முஸ்லிம்களும் உள்ளடங்கியிருக்கின்றனர்.

கடந்த வருடம் மாத்திரம் இலங்கை அகதிகளில் சுமார் 1500 பேர் நாடு திரும்பினர். இவர்களின் மீள் குடியேற்றத்திற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமையம் உதவியளித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(01)

# இந்தியக் கடற்பகுதிக்குள் நுழைந்த இலங்கை மீனவருக்குப் பாதுகாப்பு!

## இந்தியா அறிவிப்பு

தற்போதைய காலநிலை சீர்கேடு காரணமாக இந்தியக் கடற் பிராந்தியத்திற்குள் சென்ற இலங்கை மீனவருக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்று இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடற்கொந்தளிப்புக் காரணமாக தவறுதலாக இந்தியக் கடற் பிராந்தியத்துக்குள் சென்றுவிட்ட இலங்கை மீனவர்களை ஊடுருவற்காரர்கள் என்றுகூறி இந்தியக் கடற்படையினர் கைதுசெய்ய மாட்டார்கள் என்று இந்தியா உறுதியளித்துள்ளதாக கடற்தொழில் பிரதியமைச்சர் சந்திரசேன விஜயசிங்க தெரிவித்தார்.

சுமார் ஐம்பது இலங்கை மீன்பிடிப் படகுகள் இந்தியக் கடற்பகுதியில் கோவா, கர்னாடகம், மகாராஷ்டிரம், கேரளம் ஆகிய பிரதேசங்களுக்குள் சென்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படகுகளில் சென்ற மீனவர் தற்போது பெங்களூரில் உள்ள மீன்பிடித் துறைமுகம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# 16 தமிழ் அகதிகள் மன்னார் திரும்பினர்

(கொழும்பு)

இந்தியாவில் தங்கியிருந்த 16 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று தலைமன்னார் ஊடாக தாயகம் திரும்பினர்.

தலைமன்னார் கடற்பகுதியில் பிரவேசித்த இவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்த பின்னர், அவர்கள் மன்னார் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர்.

இன்று அவர்கள் மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (01)

# உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளை கூட்டமைப்பு எம்.பிக்கள் விரைவில் சந்திப்பர்!

## ஐரோப்பிய ஒன்றியம் ஏற்பாடு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளையும், அமைப்புக்களையும் சந்திப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஏற்பாடுகளை செய்து கொடுக்கவுள்ளது.

அண்மையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றிய கொழும்புப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினர்.

இதன்போது, சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே இலங்கைக்கு உதவி வழங்கவேண்டும் என வலியுறுத்தியிருந்தது.

அத்துடன், வடக்கு- கிழக்குக்கான நிதி உதவி நேரடியாக அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரசபையின் ஊடாக வழங்கப்படவேண்டும் என அவர்கள் கேட்டிருந்தனர்.

இந்த நிலையில், தாம் உதவி வழங்கும் அனைத்து நாடுகளையும், அமைப்புக்களையும் ஒரே இடத்தில். சந்திப்பதற்கு ஏற்பாடுகளை செய்து தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொண்டது.

இதற்கு இணக்கம் வெளியிட்ட ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள், அனைவரையும் ஒரே இடத்தில் சந்திக்க வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது.

இதன் அடிப்படையில் விரைவில் இவ்வாறான சந்திப்பொன்று கொழும்பில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (01)

## பாரதூரமான...

...ருப்பது சாத்தியமற்ற விடயமாகும்.

நாம் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மீதும் அதனது செயற்பாடுகளிலும் பூரண நம்பிக்கை வைத்துள்ளோம்.

எனவே இந்தச் சம்பவத்தை தீர விசாரித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடக்காமல் தடுக்க வழி செய்யவேண்டும் என கேட்கின்றோம்.

விரைவாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்து ஒரு ஆழமான விசாரணையை மேற்கொண்டு குற்றவாளிகளை இனங்காணவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய அரசின்...

இதேவேளை, எதிர்வரும் ஜுன் மாத ஆரம்பத்தில் பிரசல்ஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் ரோக்கியோ நாடுகளின் தலைமை உறுப்பு நாடுகளான - அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இலங்கையின் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் 4.5 பில்லியன் டொலர் நிதியுதவியை விடுவிக்கும் நிலைக்கு வந்துள்ளதா என்பதை ஆராயவுள்ளதாகவும் தெரியவருகிறது.

(01)

## வோல்ஷின் சாதனையை...

வேகப்பந்து வீச்சாளரான கொட்னி வோல்ஷ் 132 போட்டிகளில் விளையாடியே 519 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார்.

முரளிதரனுக்கும் அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோனுக்கும் இடையில் வோல்ஷின் சாதனையை, யார் முதலில் முறியடிப்பது என்ற போட்டி நிலவியபோதிலும் முரளிதரனே இந்தச் சாதனையை முதல் படைத்த முதலாவது சுழற்பந்து வீச்சாளர் ஆகிறார்.

முன்னதாக சிம்பாப்வே அணியுடனான முதலாவது இனிங்ஸில் வோல்ஷின் சாதனையை ஹொண்டோவின் விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் முரளி சமப்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற் போது முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெட்டில் 521 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

## அடிப்படையாகக் கொண்டு பேச...

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த யோசனைகள் குறித்து ஜனாதிபதி விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு தயாராக இருப்பதாகவும் எனினும், இந்த யோசனை இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமைய மாட்டாது. இது தீர்வின் ஒரு அங்கமாகவே இருக்கும் எனவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - ஜனாதிபதி 2000 ஆம் ஆண்டில் சமர்ப்பித்த தீர்வுப் பொதியிலும் விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைக்க முடியும் என்றும் எனினும் அவை இனப்பிரச்சினைத் தீர்வின் ஒருபடியாக இருக்கும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், ஜனாதிபதியின் இந்த முடிவில் எந்தவிதமாற்றமும் இருக்காது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை குறித்த யோசனையில் சில விடயங்கள் ஆராய முடியுமென தெரிவித்திருந்தார். எனினும், அவற்றை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தமையை அந்தப் பத்திரிகை. சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை - விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த யோசனைகளை ஜே.வி.பி ஏற்றுக் கொண்டதாக பத்திரிகைச் செய்திகளிலோ அன்றி அறிக்கைகளிலோ எந்த உண்மையும் இல்லையென ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் நேற்று இரவு தெரிவித்தார்.

ஐ.தே.கட்சி அரசு முன்னர் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது போன்று, நீண்ட பேச்சுக்களை நடத்தும் என்றும் புதிய நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் குறுகிய காலத்தில் பேச்சுக்களை நடத்துவதென்று தனித்துத் தாம் எந்த முடிவுகளையும் எடுக்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்ததாக சந்திரசேகரன் தெரிவித்தார்.

## புலிகளை ஏக பிரதிநிதிகள்...

சுதந்திர முன்னணி விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளும்படியான ஒரு திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் பிரதானமானவர்கள் அவர்களுடன் தேசிய பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடலை நடத்த வேண்டும் என்பதனை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆனாலும், இந்தப் பிரச்சினை தொடர்பாக மற்றக்கட்சிகளுடன் பிரத்தியேகமாக பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

விடுதலைப் புலிகள் தான் ஏகப் பிரதிநிதிகள் என்ற கொள்கையை ரணில் விக்கிரமசிங்க கொண்டிருந்தமையாலேயே நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவர் மக்களால் நிராகரிக்கப்பட்டார்.

ஆனால், மக்களின் இந்த ஆணைக்கு எதிராக எந்த ஒரு திட்டத்தையும் எனது தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மேற்கொள்ளமாட்டாது. பல கட்சிகளைக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் முன்னணியின் அரசாங்கமானது இலங்கையின் ஒருமைப்பாடு என்ற கொள்கையுடனே பேச்சு நடத்தும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, நோர்வேயின் பிரதமர் விரைவில் இலங்கைக்கு வந்து ஜனாதிபதி சந்திரிகாவுடன் விஷேட கலந்துயையாடலை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.